பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 29 சனிக்கிழமை 13.05.2023 கதிர் 184

## நாடாளுமன்றத்தில் மு.கா. தலைவர் நேற்று ஆவேசம்

# பெரும் அழிவு வரும் என்று அச்சுறுத்துகின்றார் வீரசேகர

### இவரால் இனப் பிரச்சினை வலுவடையப் போகிறது



இலங்கை சிங்கள பௌத்த நாடு. இதனைச் சகலரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். 'சியாம் நிக்காய' வழிபாட்டை கூட்டமைப்புத் தடுத்தால் பெரும் அழிவு ஏற்படும் என்று சரத்வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுவொரு பாரதூரமான அச்சுறுத்தல்.

இந்த அச்சுறுத்தலை விடுபவர் யார்? நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான குழுவின் தலைவரான சரத்வீரசேகர.

சிங்கள பௌத்த மயமாக்கல் என்ற போர்வையில் சரத்வீரசேகர போன்றவர்கள் முன்னெடுத்து வருகின்ற சித்து விளையாட்டினால் இந்த நாட்டில் நீடிக்கின்ற இனப் பிரச்சினை இன்னமும் வலுவடையப்போகின்றது.

2

## இது ரகசியம் அல்ல!



தலைவர்கள் ஆளுமையுள்ளவர்களாகவும் கவர்ச்சிகரமானவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்களை நோக்கிய ஈர்ப்பு தொண்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும். தலைவர்கள் சலிப்புத் தட்டுபவர்களாக இருக்கக்கூடாது. அப்படி இருப்பவர்கள் எவ்வளவு ஆளுமை மிக்கவர்களாக இருந்தாலும் மக்கள் மத்தியில் எடுபடமாட்டார்கள். அதற்கு மிகச்சிறந்த உதாரணம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவர் தனிநபராக எவ்வளவு ஆளுமை மிக்கவராக இருந்தாரானாலும் தான் போட்டியிட்ட ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில்தானும் வெற்றி பெற்றவரில்லை. இப்போதும் அவர் அந்தப் பதவியில் அமர்ந்திருப்பது சந்தர்ப்ப வசத்தால் மட்டுமே. மக்களின் ஆதரவை

2

## தகுதியானவர்கள் மேன்முறையீடு செய்யமுடியும்

நலன்புரித் திட்டத்தில் உள்ளீர்க்கப்படாத தகுதியானவர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஹெரான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷிற்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெயர்ப் பட்டியல் வெளியிட்டதன் பின்னர் அதனை பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தி பத்து நாட்கள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளது. அக்காலப் பகுதியில் நிவாரணத்தினைப் பெறவல்லவர் ஒருவர் புறக்கணிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவரால் மேன்முறையீடு செய்ய முடியும்.

அதன் பின்னர் மாவட்ட செயகத்தில் மாவட்டச் செயலர் குழுவிரால்

2

## முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி நேற்று பயணத்தை தொடங்கியது





முள்ளிவாய்க்கால் மனிதப் பேரவலத்தை, தமிழ் இனப்படுகொலையை நினைவூட்டும் வகையிலான ஊர்திப் பவனி நேற்று முல்லைத்தீவில் இருந்து தொடங்கியது.

நேற்றிரவு வவுனியாவைச் சென்றடைந்த அந்த ஊர்தி இன்று மன்னார் நோக்கிப் பயணிக்கவுள்ளது.

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக் கொத்தாக கொன்றழிக்கப்பட்டதனை

2

## உலக உணவுத் திட்ட உதவியில் தோட்ட தமிழ் மக்களுக்கு அநீதி

### உதயகுமார் எம்.பி. எடுத்துரைப்பு

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட மக்கள் இணைக்கப்படாது அநீதி இழைக்கப்படுவதாக ஐக்கிய மக்கள்சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில்வெள்ளிக்கிழமை நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா

2

## 8 பேர் கொண்ட கூலிப் படை நெல்லியடியில் நேற்று கைது



பணத்தைப் பெற்றுக்கொண்டு தாக்குதல்நடத்தும்கூலிப் படையைச் சேர்ந்த 8 பேரை நெல்லியடியில் தாம்கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கூரிய ஆயுதங்கள் மற்றும்பொல்லுகளினால் குடும்பத்தலைவர் ஒருவர்மீது தாக்குதல்நடத்தி அந்தக் காணொலியை ரிக்ரொக் செயலியில் வெளியிட்டிருக்கிறது இந்தக் கூலிப் படை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் வடமராட்சி நெல்லியடிப் பகுதியைச்

2

## பிணைமுறி விற்பனைக்கான அனுமதியால் நாடாளுமன்றத்தில் நேற்று வாக்குவாதம்

### ஆளும் எதிர்த் தரப்பினர் கருத்து மோதல்

அரச நிதி தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தற்காலிகத் தலைவர் நியமிக்கப்பட்டு ட்ரில்லியன் ரூபா பெறுமதியான பிணைமுறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்டவர்கள்முன்வைத்த குற்றச்சாட்டைஅடுத்துஆளும் தரப்பு எதிர்த் தரப்பு இடையே வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

நாடாளுமன்றம் நேற்றையதினம் சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்த்தன தலைமையில் கூடிய நிலையில் எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

அவர், அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவானது வியாழக்கிழமை ஒருநிமிடம் கூடியுள்ளது. அவ்வாறு கூடிய குழுவிற்குதற்காலிகதலைவர் நியமிக்கப்பட்டுள்ளார். வஜிர அபேவர்த்தனவே அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தலைமையிலான குழுவின் அனுமதியுடன் ட்ரில்லியன் ரூபா பெறுமதியான

2

## மலையகத் தமிழ் மக்கள் மீதான பாரபட்சம் இன்றும் தொடர்கிறது

### நாடாளுமன்றத்தில் மனோ கணேசன் இடித்துரைப்பு



பெருந்தோட்டமக்களுக்கு எதிராக காண்பிக்கப்படும் பாரபட்சங்கள் இன்னமும் காணாமல்போகவில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன்தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட மக்களுக்காக இந்த நாட்டில் அனைத்து விடயங்களிலும் பாரபட்சம் காண்பிக்கப்படுகின்றது. அந்த நிலைமை இன்னமும் மாறாத சூழலே உள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும்

2

## அரச நலன்புரித் திட்டங்களில் மலைய மக்கள் புறக்கணிப்பு

### வடிவேல் சுரேஷ் எம்.பி. சுட்டிக்காட்டு

இந்த ஆட்சியினால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித்திட்டத்தில் மலைய மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2



## பேச்சு ஆக்கபூர்வமாக அமைவதற்கு இணங்கியதை அமுல்படுத்துங்கள்

### சார்ள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

ஜனாதிபதியுடனானபேச்சு ஆக்கபூர்வமாக அமைய வேண்டுமாயின் பேசப்பட்டு இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்வெள்ளிக்கிழமை நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி

2



## கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு, வீடமைப்பு ஆகிய 4 துறைகளுக்கு மட்டுமே இனிச் சலுகை

### அத்தியாவசியமற்ற சேவைகளைக் கட்டுப்படுத்துவது அவசியம்

நாட்டிற்குப் பயனற்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் காணப்பட்டன. அவ்வாறானதிட்டங்களுக்குவழங்கிய நிதிக்கு என்ன ஆனது என்பது இன்று வரையிலும் மர்மமாகவே உள்ளது. அவ்வாறான செலவுகளையே நாம் முதலில் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. நாம் அத்தியாவசியமற்ற சேவைகளை முதலில் கட்டுப்படுப்படுத்த வேண்டியது அவசியமாகும். எதிர்காலத்தில் கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு, வீடமைப்பு ஆகிய விடயங்களுக்காக மாத்திரமே சலுகைகளை வழங்கவுள்ளோம்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். திறன் மற்றும் தொழில் கண்காட்சியான 'எமடைடள நுஒஸ்ரீழ 2023' நிகழ்வில் வெள்ளிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

கடந்த வருடத்தை திரும்பி பார்க்கின்றபோது இவ் வாறானதொரு

2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வென்றெடுத்ததால் அல்ல. தெற்கில் மட்டுமல்ல வடக்கிலும்கூட கவர்ச்சிகரமான தலைவர்கள் என்று எவரும் இல்லை. அவரால் ஈர்க்கப்பட்டு அவருக்காகவே வாக்களிப்பவர்கள் என்று சொல்லும் வாக்காளர்களை தமிழ் அரசியல் பரப்பில் மிக மிகச் சொற்பமாகவேகாணமுடியும். தலைவர்கள் அவர்களது செயற்பாடுகளுக்காக விமர்சனங்களுக்கு உள்ளாவது என்பது வேறு; மக்களுக்கு அவர்கள் மீது இருக்கும் ஈர்ப்பு என்பது வேறு.

இவ்வளவு பீடிகையும் எதற்கு என்றால், தெற்கில் தன்னை அடுத்த ஜனாதிபதியாக நிலைநிறுத்துவதற்கான இரண்டாவது கட்டப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வாரிசு ஒருவரைப் பற்றி இப்போது பரவத் தொடங்கியிருக்கும் கருத்துக்களைஉங்களோடுபகிர்ந்து கொள்வதற்காகத்தான்.

ரணிசிங்க பிரேமதாச ஒரு காலத்தில் சிங்கள மக்களின் மிகக் கவர்ச்சிகரமான தலைவர். அவரை உடல் கவர்ச்சி அல்லது பேச்சுக் கவர்ச்சி மிக்கவர் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அவரது அரசியல் செயற்பாடுகள் நுட்பங்கள் மூலம் அவர் மக்கள் மத்தியில் ஈர்ப்புக்குரிய தலைவராக விளங்கியவர். அதிகாலையிலேயே எழுந்து பத்திரிகைகளை எல்லாம் படித்துவிட்டு, அதில் மக்களின் குறைபாடுகள் பற்றி வந்திருக்கும் செய்திகள் தொடர்பில் என்னநடவடிக்கைகள்எடுக்கப்பட்டிருக்கின்றன என்று தனது செயலாளர்களைக் காலையிலேயே அழைத்து வினவி, அதற்குரியநடவடிக்கைகளை எடுப்பார்அவர்என்றுஅவருக்கு நெருக்கமானவர்கள்சொல்லக் கேட்டிருக்கின்றேன். நேரில் பழகுவதற்குமிகவும்இனிமையான நபர் என்பதையும் பலர் சொல்லக்கேட்டிருக்கின்றேன். தனது செயல் மற்றும் நடவடிக்கைகளால் தன் முன்னால் உள்ளவர்களைக் கவர்ந்திழுக்கும் சக்தி அவருக்கிருந்தது.

அவரதுவாரிசாகஇப்போது அரசியல் களத்தில் இருப்பவர் சஜித் பிரேமதாச. வாரிசு என்றபோதும் தந்தையால் கைப்பிடித்து அழைத்தது வந்து கட்சியில் இந்த உயரத்தில் அமர்த்தப்பட்டவரல்லர் அவர். முன்னாள் ஜனாதிபதியின் மகன், பாரம்பரிய அரசியல் குடும்பத்திலிருந்து வந்தவர் என்கிற பின்னணிகள் எல்லாமும் இருந்தபோதும், கட்சிக்குள் மிகக் கீழிருந்து மேலே வந்தவர். எனவே அவரை வாரிசு அரசியல்வாதி என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் ஆளுமை மிக்க ஒரு தலைவரின் மகனாக அவரிடமும் ஆளுமையை எதிர்ப்பார்ப்பது தவிர்க்க முடியாதது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்பாக சஜித் பிரேமதாஸ எடுத்த அரசியல் முடிவுகள் பலவும் பலவிதமான விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. குறிப்பாக ராஜபக்ஷக்களின் அதிகாரம்ஆட்டம்கண்டு,ஆட்சி தள்ளாடியபோது ஆட்சியைப் பொறுப்பேற்குமாறு சஜித்திற்கு விடுக்கப்பட்ட அழைப்பை அவர் ஏற்றுக்கொள்ளாமல் விட்டமைகடுமையானவிமர்சனங்ளுக்கு உட்பட்டிருக்கின்றது. அதன் விளைவே இன்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்திருப்பதும் என்று விமர்சிப்பவர்களும் இருக்கின்றார்கள்.

அத்தகைய விமர்சனங்களுக்குநடுவேமீண்டும்ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கனவோடு இருக்கின்றார் அவர். இப்போதைக்கு எதிர்க்கட்சி வரிசையில் அவரை விட்டால் வேறு தெரிவுகளும் கிடையாது. அப்படிஜனாதிபதித் தேர்தலைநோக்கியஓட்டத்தில் மற்றைய தலைவர்களையும் மக்களையும் தன்னை நோக்கி ஈர்ப்பதற்குப்பதில்தன்னைக் கண்டாலே தெறித்து ஓடவைக்கும்வகையிலேயே செயற்பட்டு வருகின்றாராம் சஜித் பிரேமதாச.

அண்மையில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க் கட்சிகள் அனைத்தும் சஜித் பிரேமதாசவின் கீழ் ஒருங்கிணைந்து செயற்பட இணக்கம் கண்டிருந்தன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கூட அதில் இணைந்திருந்தார். ஒருங்கிணைந்த எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் அடிக்கடி கூடிப் பேசுவதன் மூலமே செயற்பாடுகளை வலுப்படுத்த முடியும் என்று வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்துநாடாளுமன்றத்தில் அத்தகைய சந்திப்புக்களை ஏற்பாடு செய்தார் சஜித்.

கடந்த வாரம் அத்தகைய இரண்டாவதுசந்திப்புநடந்தது. எதிர்க்கட்சிகளில்அங்கம்வகிப்பவர்களில் பெரும்பாலான தலைவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அதற்கு அடுத்தடுத்த நாளில் மத்திய வங்கிதொடர்பானசட்டமூலம் விவாதத்திற்கு வரவிருந்தது. அந்தச்சட்டமூலம்தொடர்பில் மற்றைய தலைவர்களுக்கு விளக்கத்தொடங்கினார்சஜித். ஏனைய தலைவர்களும்கற்றறிந்தவர்கள், அரசியலைப் புரிந்துகொண்டவர்கள். இருப்பினும்பாடசாலைப்பிள்ளைகளுக்கு வகுப்பு எடுத்த மாதிரித் தொடர்ந்து நீட்டி முழக்கி விரிவுரையாற்றிக் கொண்டிருந்தாராம்சஜித். ஒரு கட்டத்தில் இந்தாள் எப்போது முடிப்பான் என்கிற அளவில் மற்றைய தலைவர்கள் சலிச்சுப் போனார்கள். ஆளைவிட்டால் போதும் தப்பியோடி விடலாம் எனகிற அளவிற்கு வறுத்தெடுத்துவிட்டார் சஜித்.

எதை எப்போது எவ்வளவில் பேசுவது என்பதைத் தலைவர்கள் தெரிந்திருக்க வேண்டும். இல்லையேல் அவர்களின் மவுசு காற்றோடு போய்விடும்.

- இடிமின்னல் -

## பெரும் அழிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறு தெரிவித்தார் முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம். நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரிநன்மைகள்கொடுப்பனவுத் திட்டம் தொடர் பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையின் வெள்ளை மணல் பகுதியில் பட்டிணமும் சூழலும் பகுதிக்குள் வரவுள்ள 900 ஏக்கர் நிலப்பரப்பினைசுவீகரிப்பதற்கு விமானப்படை முயற்சிகளை எடுத்துள்ளது. குறிப்பாகமாபிள் பீச்சிலிருந்து கருமலைஊற்று வரையிலான மிகப்பெரும் பிரதேசத்தினையே இவ்வாறு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒருபக்கத்தில்கடற்கரை மறுபக்கத்தில் மக்கள் உள்ளனர். இதற்குஇடைப்பட்ட பகுதியைக் கைப்பற்றுவதே திட்டமாகும்.

அந்தப் பகுதியில் கரைவலைப்பாடுகள் பல உள்ளன. அந்தக் கரைவலைபாடுகள் ஊடாகவே மக்களின் வாழ்வாதாரம் முன்னகர்த்திச் செல்லப்படுகின்றது. அவ்வாறிருக்கின்ற நிலையில் குறித்த பகுதியைகைப்பற்றிஅதனைச் சுற்றுலாத்துறைக்கான விற்பனைப் பண்டமாக மாற்றுவதற்கு விமானப்படை முயற்சிக்கின்றது.

இதேபோன்று தான் அரசிமலைப் பகுதியிலும் 2 ஆயிரம் ஏக்கர்களை அபகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரகலய போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலமான ஜுன் 20ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தவிடயம்சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தோம். அவர் அதனை கவனத்தில் கொண்டுள்ளார்.அந்த விடயத்தினை சுட்டிக்காட்டுகின்ற போது 2 ஆயிரம் ஏக்கர்கள் தேவையில்லை 200ஏக்கர்களே போதுமானது. தேறியதாக100ஏக்கர்களேபயன்படுத்தபடும். ஆகவே 2ஆயிரம் ஏக்கர்களை சுவீகரிப்பது பொருத்தமல்ல என்று ஜனாதிபதியே பகிரங்கமாக கூறியுள்ளார். அதேபோன்று திருகோணமலை விடயத்தினையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அதேநேரம், தொல்பொருள் திணைக்களம் பகுதிகளை அடையாளப்படுத்துவதற்காகவருகைதருகின்ற போது அமைச்சர், மதத் தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் உள்ளிட்டவர்கள் வருகின்றார்கள். அதனைவிடவும் மதத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரும்துப்பாக்கிகளுடன் வருகை தருகின்றார்கள்.

இந்த நிலைமைகள் தொடர்ந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறிருக்கும். ஜெனிவாவில் காணிகளை அபகரித்தல் உள்ளிட்ட அரசு மீதான குற்றச்சாட்டுக்கள் நீடிக்கின்ற நிலையில் காணிகளை அபகரிக்கும் நிலைமைகள் தொடர்ந்தால் நிலைமைகள் எவ்வாறு இருக்கும்.

காணிஅபகரிப்புதொடர்ந்தால் இந்த நாட்டில் உள்ள வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியாது போகும்.

இந்த ஆட்சி நலன் புரி விடயங்களை முன்னெடுக்கின்றது. இது உள்நாட்டிலும், சர்வதேசத்திலும், வரவேற்கப்படுகின்ற விடயமாக உள்ளது. ஆனால் இந்த விடயங்கள் உண்மையிலேயே வெற்றிபெறவேண்டும்என்ற சிந்தனைஆட்சியாளர்களுக்கு ஏற்படவேண்டும்.

வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் ஆட்சியாளர்கள் காணிகளை அபகரிப்பதை நிறுத்தவேண்டும்.

அபகரிக்கப்பட்ட காணிகளை மீளவும் மக்களிடத்தில் கையளிக்க வேண்டும். அவ்வாறில்லாது நலன்புரித் திட்டங்களை கொண்டுவந்து நடைமுறைப்படுத்தினால் அதில் இலக்கை அடைய முடியாது என்றார்.

## தகுதியானவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்தமேன்முறையீடுஆராயப்பட்டுத்தகுதியானவர்களுக்குக் கொடுப்பனவைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## முள்ளிவாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அடையாளப்படுத்தி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட்டு வருவதோடுபதினெட்டாம்திகதி முள்ளிவாய்க்கால்முற்றத்திலே மாபெரும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

தமிழ் இனப் படுகொலையின்நினைவாகஇந்தஆண்டு பல பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு பல தரப்பினராலும் ஒழுங்கமைக்கப்பட்டுச்செயற்படுத்தப்படுகின்றன.நேற்றைய தினம் வடக்கு கிழக்கு மாவட்டங்கள் பலவற்றிலும் இந்தக் கஞ்சிவழங்கல்நிகழ்வு இடம் பெற்றது. இதன் மற்றொரு அங்கமாக முல்லைத்தீவில் இருந்து முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்திப் பவணி தொடங்கப்பட்டது.

வரலாறுகள் எதிர்கால சந்ததிக்கு கடத்தப்படுவதன் ஊடாக எங்களுடைய நீதி கிடைக்கும் வரை எங்களுடைய போராட்டங்களை தொடர வேண்டும் என்கின்ற அடிப்படையிலேமுள்ளிவாய்க்கால் நினைவு சுமந்த ஊர்தி பவனி ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்தில்இருந்து தொடங்கப்பட்டதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்க.ரவிகரன்தெரிவித்தார்.

முல்லைதீவுமாவட்டத்தில் இறுதி யுத்த காலப் பகுதியில் கடுமையான செல் தாக்குதல்கள் மற்றும் விமானத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்களால் பெரும்எண்ணிக்கையில்மக்கள் கொல்லப்பட்ட கப்பலடிப் பகுதியிலிருந்து நேற்றுக் காலை தொடங்கியது இந்த ஊர்திப்பவனி. முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் இருந்து வட்டுவாகல்பாலம்ஊடாகமுல்லைத்தீவுநகரைவந்தடைந்து அங்கிருந்து முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, புளியங்குளம் ஆகிய பகுதிகளில்மக்கள் அஞ்சலிகளோடு இரவு வவுனியாவை சென்றடைந்துள்ளது.

மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், பகுதிகளுக்கும் செல்லும் இந்த ஊர்தி மீண்டும் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால்முற்றத்தை மே 18 வந்தடையும் என்று இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## உலக உணவுத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாவட்டத்திற்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் உதவித்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

அந்தஉதவித்திட்டமானது பெருந்தோட்ட மக்கள் அதிகமாக வாழும் நுவரெலியா மற்றும் அம்பேகம பிரதேச செயலகங்களுக்கு உட்பட்டு முன்னெடுக்கப்படவில்லை.

நுவரெலியா மற்றும் அம்பேகம பிரேச செயலகங்களைத் தவிர்த்து, வலைப்பனை மற்றும் அங்கு ராங்கெத்த பிரேதேச செயலங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்கான காரணம் இன்னமும்கூறப்படவில்லை. ஆனால்அந்த மக்கள்மிகவும் நெருக்கடிகளில் உள்ளார்கள். அவ்வாறு நெருக்கடிகளில் உள்ள மக்களை இணைத்துக்கொள்ளாமையானது அந்த மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும் - என்றார்.

## 8 பேர் கொண்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சேர்ந்தவர்கள். கடந்த 10 நாள்களாக தலைமறைவாகியிருந்த நிலையில் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர். காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய பொலிஸ் புலனாய்வுபிரிவினரே இவர்களைக் கைது செய்தனர்.

10 நாள்களுக்கு முன்னர் 54 வயதுடைய குடும்பத்தலைவர் மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியது. படுகாயடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

தாக்குதல் நடத்தும் காணொலி பதிவு ரிக்ரொக் செயலியில்வெளியிடப்பட்டது. அதில் தாக்குதல் நடத்துவர்களின் முகங்கள் மறைக்கப்பட்டிருந்தன. எனினும் குற்றவாளிகளை அடையாளம் கண்ட பொலிஸார் அவர்களைத் தேடி வந்தனர். சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும்பொலிஸ்புலனாய்வு பிரிவினர்நேற்றிரவு8பேரைக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்துதாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாள்கள், கூரிய ஆயுதங்கள் மற்றும் பொல்லுகள் கைப்பற்றப்பட்டன.

இந்தக் கும்பலுக்கு வெளிநாடுகளிலிருந்துபணம்அனுப்பப்படுவதாகவும் இவர்கள் பணம்பெற்றுக்கொண்டுகூலிப்படையாக வன்முறைகளில் ஈடுபடுகின்றனர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் எட்டுப் பேரும் இன்று பருத்தித்துறை நீதிவான்நீதிமன்றில்முற்படுத்தப்படவுள்ளனர்.

## பிணைமுறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிணை முறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மீண்டும் பணத்தினை அச்சிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இதுவென்ன வேடிக்கை - என்றார்.

இதனையடுத்து எழுந்து பதிலளித்த நிதி இராஜாங்க அமைச்சர்ஹெரான்சேமசிங்க, கட்சித்தலைவர்கள்கூட்டத்தில் நானும் பங்கேற்றிருந்தேன். அந்தக் கூட்டத்தில் தாங்களும் கலந்து கொண்டிருந்தீர்கள். அதில் திறைசேரி முறிகளின் விலைமனுக்களைஅதிகரிக்க வேண்டியதன் தேவையை விளக்கியுள்ளோம். ஆகவே சட்டரீதியான நிலைமையொன்று இதில் ஏற்படாது. நிதித் தெரிவுக்குழு ஒருநிமிடத்தில் கூடிக்கலையவில்லை - என்றார்.

தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஒன்றரை மணிக்கு வர்த்தக்குழுவினை கூட்டினார்கள். அதன்தொடர்ச்சியாக நிதிக்குழு விடயங்களுக்கான அனுமதிகளைகோரினார்கள். நாம்வழங்கினோம். அனால் அதன் பின்னர் மூன்று மணிக்கு கூடியுள்ளார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் 'பொம்மை' ஒன்றை தலைமைப் பதவியில் அமர்த்தி ட்ரில்லியன் ரூபா முறிகள் விற்பனைக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள்.

பெரு வணிகம், நுண் வணிகம் பற்றிய எந்தவிதமான அடிப்படைய அறிவு மற்ற ஒரு பொம்மையைத் தான் தலைமைப் பதவிக்கு அமர்த்தியுள்ளார்கள். அந்தப் பொம்மை கைதட்டுவதற்கு எல்லாம் தலை அசைக்கும். உண்மையில்கள ஆய்வுகள் செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டிய முடிவை ஒரு நிமிடத்திற்குள் எடுத்துள்ளர்கள் - என்றார்.

தொடர்ந்து, ஆளும் தரப்பில் அமைச்சர் பந்துல குணவர்த்த எழுந்து, நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொள்கின்றபோது,பணத்தை அச்சிடுவதற்கான இயலுமை எமக்கு இல்லை. ஆகவே தவறான கருத்துக்களை கூறாதீர்கள். மேலும் முறிகள் உள்ளிட்டவற்றின் பெறுமதியை அதிகரிப்பதற்கான அனுமதியை நாம் உரியவாறு பெற்றிருக்கின்றோம் - என் றார்.

இதனையடுத்து, லக்ஷ்மன் கிரியெல்ல மீண்டும் எழுந்து, நீங்கள் பணத்தை அச்சிடுவதில்லை என்று கூறினாலும் பணத்தை அச்சிடும்நிலைமைதான் உள்ளது. அதனை உங்களால் தட்டிக்கழித்துவிடமுடியாது - என்றார்.

தொடர்ந்து, ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நாம் அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவிற்குத் தலைவரை நியமித்தோம். ஆனால்எதிர்க்கட்சியினருக்கு அவர்எதிர்க்கட்சிஉறுப்பினரா இல்லைஆளும்கட்சிஉறுப்பினரா என்ற சந்தேகம் வந்துவிட்டது. இதனால் அவருக்கு அழுத்தங்களைக் கொடுத்துப் பதவிவிலகச்செய்துவிட்டனர். ஆகவே தவறு எம்முடையதில்லை - என்றார்.

இருப்பினும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நீங்கள் நியமித்தவர் பதவி விலகிய பின்னர் அந்தப் பதவிக்கான வெற்றிடம் தற்போதும் காணப்படுகின்றது. அதற்காக நாம் ஒருவரை முன்மொழிந்துள்ளோம். அவரை நியமிப்பதற்கு ஏன் தயங்குகின்றீர்கள். அடிக்கடி தற்காலிகத் தலைவர்களை நியமித்துதீர்மானங்களைத் எடுக்கின்றீர்கள். நாடாளுமன்ற சம்பிரதாயத்தை மீறிச் செயற்படாதீர்கள் - என்றார்.

தொடாந்து இரு தரப்பினையும் சமாதானப்படுத்திய, சபாநாயர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, இந்த விடயத்தில் பிரச்சினைகள் உள்ளதால்அதனைஆராய்ந்து முடிவை எடுப்போம் என்று விவாதத்தினை முடிவுக்கு கொண்டு - வந்தார்.

## மலையகத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வறுமை ஒழிப்பு தொடர்பான கணக்கெடுப்பிலும் இந் நிலைமைகாணப்படுகின்றது. ஆகவே அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். பயனாளிகள் தெரிவு அரசியல் கலப்பின்றி நடைபெறவேண்டும்.வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் உண்மையாகநன்மைகளை அடையவேண்டும் - என்றார்.

## அரச நலன்புரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆட்சியாளர்கள் முன்னெடுக்கின்ற 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தில் மலையக மக்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்திற்கான தெரிவின்போது மலையகத்தில் உள்ள அரச அதிகாரிகள் பின்பற்றிய நடைமுறை வித்தியாசமானது. ஏற்கனவே சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறும் பயனாளிகளின் பட்டியல் உள்ளது.

சமுர்திக் கொடுப்பனவுகளை பெறுபவர்கள்தான் உண்மையிலேயே வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள் என்று கருத்தி அந்தப் பட்டியிலில்உள்ளவர்களையேபுதியதிட்டத்திற்கும் உள்ளீர்த்துள்ளார்கள். இது பொருத்தமற்றதொரு செயற்பாடாகும்.

அதேநேரம், குறித்த அரச அதிகாரிகள் ஆய்வுக்காக கிராமங்களில் உள்ள பயனாளிகளின் வீடுகளுக்குச் செல்கின்ற போது மக்கள் அனைவரும் தோட்டங்களுக்கு வேலைக்குச்சென்றுள்ளனர். அதனால் அவர்கள் உள்வாங்கப்படாத நிலைமையே உள்ளது - என்றார்.

## பேச்சு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 42 சதவீதமான மக்கள்வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கிறார்கள். இனங்களுக்கு இடையிலானசரியானசமத்துவமான அரசியல் கொள்கையும், சரியான பொருளாதாரக் கொள்கையும்இருந்திருந்தால் இலங்கையில் வறுமையை ஒழித்திருக்கமுடியும்.எனினும் நலன்புரிக்கொடுப்பனவுகளின் மூலம் வறுமையை ஒழிக்க முடியாது.

நலன்புரிக் கொடுப்பனவுகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகஅமைச்சினால் புதிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அது பரிசீலனையில் இருப்பதாக இராஜாங்கஅமைச்சர்கூறியுள்ளார்.

அரசியல் ரீதியலான மற்றும் பக்கச்சார்பான பரிசீலனை இன்றி வறுமையில் இருப்பவர்கள்யார்என்பதனை முறையாக ஆராய்ந்து இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகள் தபால் நிலை யங்கள் மற்றும் உபதபாலகங்களிலும் வழங்கப்பட்டுவந்தநிலையில்தற்போது அதனைசமூர்த்திவங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தீர்மானித்துள்ளமை சிக்கலானது. சில இடங்களிலேயே சமுர்த்தி வங்கிகள் உள்ளன. இதனால் அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக பெருமளவு பணத்தை செலவிட்டு செல்ல வேண்டியுள்ளது.

வயது முதிர்ச்சியால் அவர்களுக்கு தூர இடங்களுக்கு செல்வது சிக்கலானது. இதனால்இந்தகொடுப்பனவை கிராம அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

அத்துடன் சில வருடங்களுக்கு முன்னர் நெதர்லாந்து அரசின் உதவியின் கீழ் வடக்கு மாகாணத்தில் புதிய வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டன. அந்த வகையில் முல்லைத்தீவு மாங்குளம் பிரதேசத்தில்நவீன மருத்துவ உபகரணங்களுடன் விசேட தேவையுடையோருக்கான வைத்தியசாலை அமைக்கப்படுகின்றது. அந்த வைத்தியசாலைக்கு வைத்தியர்கள், ஊழியர்களுக்கான நியமனங்கள் இல்லாமல் உள்ளது.

அதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். புதிய வைத்தியசாலை அமைக்கப்பட்டும் அது மக்களுக்கு சேவையாற்ற முடியாத கட்டடமாக இருக்கக்கூடாது. இதனால் இது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும்.

அதேநேரம், ஜனாதிபதியுடனான வடக்கு,கிழக்கு மக்கள் பிரதிநிதிகள் நடத்திய பேச்சுஆக்கபூர்வமாகஅமைய வேண்டுமாக இருந்தால் அதில் பேசப்பட்ட விடயங்கள் நடைமுறைச்சாத்தியமாக வேண்டும். இணக்கப்பாடு எட்டப்பட்டவிடயங்களைநடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

## கல்வி, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கண்காட்சியை நடத்த எம்மால் முடிந்திருக்குமா என்பது கேள்விக்குரியதே. குழப்பகரமான சூழலில் முடங்கிக் கிடந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம்.

நாம்புதியவரவு, செலவுத் திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டியது அவசியமாகிறது. அதேபோல் எமது செலவுகளையும்நாம் உரிய முறையில் முகாமைத்துவம் செய்திருக்கலாம். கடந்த பத்து வருடங்களில் நமது செலவினங்கள் தொடர்பில் பார்க்கின்றபோது, நாம் கல்விக்கு பணம் ஒதுக்கீடு செய்யாமல் சில அரச நிறுவனங்களுக்கே அதிகமாகப் பணம் ஒதுக்கீடு செய்துள்ளோம் என்பதைக் கண்டு கொண்டேன்.

நாம்ஶ்ரீலங்கன்விமான சேவை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம்ஆகியவற்றுக்குச் செலவிட்ட பணத்தைக் கல்விக்கும் சுகாதாரத்திற் கும் செலவிட்டிருந்தால் தெற்காசியாவின் மிகச்சிறந்த கல்வித்துறையை கொண்ட நாடுகளுடன் போட்டியிடும் நிலையைஅடைந்திருப்போம்.

அவை ஒன்றையும் செய்யாமையால் இன்று கடன்களை செலுத்தி முடிக்க வேண்டிய நிலை எமக்கு உருவாகியுள்ளது. அடுத்த பத்துவருடங்களில்விரைவாக; கடன்களை செலுத்தி முடிக்கவே நான் முயற்சிக்கிறேன்.

நாட்டிற்குப் பயனற்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் காணப்பட்டன. அவ்வாறான திட்டங்களுக்கு வழங்கிய நிதிக்கு என்ன ஆனது என்பது இன்று வரையிலும் மர்மமாகவே உள்ளது. அவ்வாறான செலவுகளையேநாம்முதலில் கட்டுப்படுத்தவேண்டியுள்ளது. நாம் அத்தியாவசியமற்ற சேவைகளை முதலில் கட்டுப் படுப்படுத்த வேண்டியது அவசியமாகும். எதிர்காலத்தில் கல்வி, சுகாதாரம், சமூக பாதுகாப்பு, வீடமைப்பு ஆகிய விடயங்களுக்காக மாத்திரமே சலுகைகளை வழங்கவுள்ளோம்.

அதேபோன்று, நாட்டுக்கு நல்ல கல்வி முறையொன்று அவசியம். இந்தக் கல்வி

(05ஆம் பக்கம் பார்க்க)

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
075 330 5500 070 330 5500 076 122 1566
இந்தியா-சீனா-தாய்லாந்-டுபாய்
உங்கள் பொருட்கள் விபரங்களையும் நிறையையும் வட்ஸ்சப்(whatsup) செய்வதன் ஊடாக கட்டண விபரங்களை அறிய முடியும்
0753305500

காலைக்கதிர்
Kalaikkathir

# தாவளை - இயற்றாலை ஊரெல்லை வீதி போராட்டத்தின் பின்னர் மீண்டும் திறப்பு





சாவகச்சேரி பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியைத் தனியார் ஒருவரிடம் இருந்து மீட்டு மக்களின் பாவனைக்கு வழங்குமாறு அக்கிராம மக்கள் சாவகச்சேரி பிரதேச சபை தலைமைக் காரியலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் பிரதேச சபையின் பிரதான வாயிலை மறித்து இந்தப் போராட்டம் இடம்பெற்றது. அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள், பாடசாலை மாணவர்கள், சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் செ.மயூரன், முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிரோ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திலகராணி உட்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பொதுமக்கள் பயன்படுத்தும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமானது எனக் கூறப்படும் தாவளை இயற்றாலை ஊரெல்லை வீதியையும் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான குளத்தையும் சுற்றித் தனியார் ஒருவர் எல்லை வேலி அமைத்திருந்தார். அவை தனக்குரியவை என்று உரிமை கோரினார். கிராம மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக குறித்த வீதியைத் தடை செய்தார்.

இது தொடர்பாக அந்தக் கிராம மக்கள் 2020ஆம் ஆண்டு சாவகச்சேரி பிரதேச சபை, கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் என்பவற்றில் முறைப்பாடு செய்திருந்தனர். இதனை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட திணைக்களங்கள் அவர்களுடைய ஆவணங்களின் அடிப்படையில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான குளத்தின் அரைவாசிப் பகுதியும் சாவகச்சேரி பிரதேச சபைக்கு சொந்தமான 100 மீற்றர் வரையான வீதியும் குறித்த தனிநபரால் எல்லையிடப்பட்டு அபகரிக்கப்பட்டதைக் கண்டறிந்தனர்.

இதையடுத்து சாவகச்சேரி பிரதேச சபை குறித்த வீதியினைக் 2022 ஆம் ஆண்டு டிசெம்பரில் மக்கள் பாவனைக்காக எல்லையிட்டு திறந்து விட்டிருந்தனர். ஆனால் வீதியைத் திறந்து விட்ட சில நாள்களிலேயே குறித்த தனிநபரால் மீண்டும் அந்த வீதியும் குளமும் முள்கம்பிவேலியிட்டு அடைக்கப்பட்டது. இதனால் மக்களும் மாணவர்களும் குளத்தினூடாகவே பயணம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்நிலையில் குறித்த வீதியை மீட்டுத்தருமாறு பிரதேசசபையிடம் பலதடவை முறையிட்டும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் நேற்றுக் காலை பிரதேச சபையினை முற்றிகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். எச்.சீ.ரணசிங்க மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் க.சந்திரகுமார் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினார்கள்.

இதன்போது குறித்த வீதியை இன்றைய தினமே உடனடியாக மக்கள் பயன்படுத்தக்கூடியதாக மீட்டுத் தந்தால் மட்டுமே அங்கிருந்து கலைந்து செல்வோம் என உறுதியாகத் தெரிவித்தனர்.

இதையடுத்து பிரதேச சபை செயலாளர் உட்பட்ட அதிகாரிகள், கொடிகாமம் பொலிஸார், சாவகச்சேரி பிரதேச செயலர், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட கிராமமக்கள் உள்ளிட்டவர்கள் தனியாரால் அபகரிக்கப்பட்ட தாவளை இயற்றாலை ஊரெல்லை வீதிக்குச் சென்றனர்.

பொலிஸாரின் பாதுகாப்போடு வீதியை அபகரித்து போடப்பட்டிருந்த சுமார் 100 மீற்றருக்கும் அதிகமான முட்கம்பி வேலிகளையும் தூண்களையும் அகற்றி அளவீடு செய்து பொதுமக்களின் பாவனைக்காக திறந்து விட்டனர். இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர். 03

# சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கமாக செயற்படவேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் கருத்து



கொழும்பு, மே 13

சர்வதேச நாணய நிதியத்துடன் நெருக்கமாக செயற்படுவதன் மூலம் தற்போதுள்ள ஒப்பந்தங்களை மேலும் வலுப்படுத்த முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு நாட்டிற்கு விஜயம் செய்துள்ளமை அதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று(வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் கடன் வரம்பை அதிகரிக்க முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அரசாங்கம் திறைசேரி உண்டியல் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய 5,000 பில்லியன் ரூபா கடன் எல்லையை 6,000 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கவே முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மக்களை வேண்டும் என்றே ஏழைகளாக்கியுள்ளது அரசு

## கபீர் ஹாசிம் குற்றச்சாட்டு



பொதுஜன பெரமுன கடந்த காலங்களில் மக்களை வேண்டுமென்றே ஏழைகளாக்கியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் குற்றம்சாட்டியுள்ளார்.

நலன்புரி கொடுப்பனவுகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே கபீர் ஹாசிம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டில் 11 வீதமாக ஆக இருந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 25 வீதம் ஆக உயர்ந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேநேரம் அவர்களின் மீட்சிக்காக மிகக் குறைந்த மானியங்களையே அரசாங்கம் வழங்குவதாகவும் கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் முகாமைத்துவமில்லாத நடவடிக்கையால் இலங்கையில் சுமார் 55 லட்சம் ஏழைகள் இருக்கின்றனர் எனவும் கபீர் ஹாசிம் குறிப்பிட்டுள்ளார்.

# சோழர்காலத்தில் கட்டப்பட்ட உருத்திரபுரீஸ்வரர் சிவனாலயக் காணியிலும் தொல்பொருள்களாம்



கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்பொருள்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அடையாளப் படுத்தியுள்ளது.

இந்துக்களின் பொற்காலமாகக் கருதப்படும் சோழர்காலத்தில் முற்றுமுழுதாக திராவிடக் கட்டடக் கலை மரபை பின்பற்றி உருத்திரபுரீஸ்வரர் சிவாலயம் கட்டப்பட்டது.

வரலாற்றுத் தொன்மையும், பழைமையும் வாய்ந்த சிவாலயத்தை அபகரிப்பதற்கான முயற்சிகள் தொல்பொருளியல் திணைக்களத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் உருத்திரபுரஸ்வரபுரம் ஆலயம் அமைந்துள்ள காணியில் புராதன தொல்லியல் சின்னங்கள் அமைந்துள்ளதாக தொல்லியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஆகவே குறித்த நிலப்பரப்பை எல்லைப்படுத்தும் நடவடிக்கையை எதிர்வரும் 18 ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானித்து கரைச்சி பிரதேச செயலகத்தால் அறிக்கையும் கையளிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் ஆலயம் அமைந்துள்ள காணியில் தொல்பொருள்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்தியுள்ளது.

# சம்பிக்கவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்



நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்கரணவக்கவுக்கு விதிக்கப் பட்ட வெளிநாட்டு பயணத் தடையை நீக்கி கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் தனது மகளைப் பார்ப்பதற்காக கனடா செல்ல விரும்புகிறார் என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தை தடுக்க தவறியமை மற்றும் சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டின் பேரில் சம்பிக்க ரணவக்கவுக்கு வெளிநாடு செல்ல தடை விதிக்கப்பட்டது.

அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலித்த உயர்நீதிமன்றம், 13 முதல் செப்ரெம்பர் 23 வரை வெளிநாட்டு பயணங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிட்டது.




# டெங்கு நோய் பாதித்த சிறுவர்கள் கடினமான வேலை செய்யக்கூடாது

## கல்லீரல் பாதிக்குமென தீபால் பெரேரா அறிவுரை

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமிகளின் கல்லீரல் பாதிப்பை தடுப்பதற்கு பெற்றோர்கள் பொறுப் புடன் செயற்பட வேண்டுமென சிறுவர் வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு காய்ச்சலிலிருந்து மீண்ட சிறுவர், சிறுமிகளின் மீண்டும் கடுமையான வேலையில் ஈடுபடுத்தினால், கல்லீரலில் பாதிப்பு அதிகமாக இருக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

'டெங்கு குணமானதும் ஓரிரு வாரங்களுக்கு, சிறுவர், சிறுமிகளுக்கு அதிக உடல் உழைப்பை கொடுக்காதீர்கள். கல்லீரல் பாதிக்கப்பட்டால், மூளையை பாதிக்கும். எனவே, டெங்குவை லேசாக எடுத்துக்கொள்ளாதீர்கள். டெங்கு வந்தால் சிக்கல்கள் வரலாம்.'

டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 40 சிறுவர்கள் தற்போது லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனவும் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இந்த ஆட்சி முன்னுதாரணமாகச் செயற்படவேண்டும்

**இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழர்கள் ஆயுத வன்முறையைத் தேர்ந்தெடுத்த தொடக்க நிலையில், தமிழர்களைப் பார்த்துப் போர் என்றால் போர், அமைதி என்றால் அமைதி என்றார் அப்போதைய அரசுத் தலைவர் ஜே.ஆர்.ஜெவர்த்தன. அதனை விளைவை அடுத்து வந்த 30 வருடங்களுக்கு நாடு அனுபவிக்கவேண்டி வந்தது. நாடு பெரும் அழிவுகளைச் சந்தித்தது. இன்றைய பொருளாதார நெருக்கடிகளுக்கு போரும் ஒரு காரணமாக இருந்தது.**

**இப்போது ஜே.ஆரின் இடத்தை நிரப்ப வந்திருக்கிறார் சரத் வீரசேகர. நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் தொல்பொருள் திணைக்களத்தின் தூபி சின்னத்தை மாற்ற முடியாது. ஏனெனில், இலங்கை பௌத்த சிங்கள நாடு. பௌத்த சின்னங்களை அழித்து, அதன் மீது சிவலிங்கம், திரிசூலம் ஆகியவற்றை பிரதிஷ்டை செய்து, அதனை கோவிலாகத் திரிபுபடுத்துவோர் தண்டிக்கப்பட வேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள சியாம் நிகாய பௌத்த வழிபாட்டுக்கு கூட்டமைப்பினர் தடை ஏற்படுத்தினால் பெரும் அழிவு ஏற்படும் எனத் தெரிவித்தார்.**

**இதனை நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை சுட்டிக் காட்டிய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் க்கீம் இது எவ்வளவு பெரிய அச்சுறுத்தல் என்பதை எடுத்துரைத்தார். சரத் வீரசேகரவே நாடாளுமன்றத்தின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான குழுவிற்குத் தலைமை தாங்கும் உறுப்பினர் ஒருவரே இந்த அச்சுறுத்தலை விடுத்திருக்கின்றார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அப்படியென்றால் நாடாளுமன்றமே தமிழர்களை ஒட்டுமொத்தமாக அச்சுறுத்துகின்றது என்பதுதானே அர்த்தம்? ஆனால், அது குறித்து மு.கா. தலைவரைத் தவிர வேறு எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. சரத் வீரசேகரவைக் கண்டிக்கவும் இல்லை.**

**சரத் வீரசேகர போன்றவர்கள், படைத்துறைப் பின்னணியில் இருந்து கோட்டாபய போன்றவர்களால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவர், அவரது தீவிரக் கருத்துக்களைக் கணக்கில் எடுக்காமல் கடந்துபோய்விடவேண்டும் என்று ஒருபோதும் இருந்துவிடமுடியாது. மு.கா. தலைவர் குறிப்பிடுவதைப் போன்றே இத்தகைய கருத்துக்கள் இனப் பிரச்சினையை மேலும் வலுவாக்கும்.**

**இதற்கு மிகச் சிறந்த உதாரணமும் உண்ட. அண்மையில் வெடுக்குநாறி மலையில் சிவலிங்கம் உள்ளிட்ட வழிபாட்டுச் சிலைகள் உடைக்கப்பட்டன. நீதிமன்ற உத்தரவின்படி அவை மீள அங்கே வைக்கப்பட்டன. அதன் பின்னர் எல்லையோர சிங்களக் கிராமங்களுக்குள்ளால் வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேர, அங்கே தொல்பொருள் சின்னங்கள் சேதப்படுத்தப்பட்டமைக்காக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்று சூளுரைத்துவிட்டுச் சென்றிருந்தார். இது நடந்த சில நாள்களிலேயே வெடுக்குநாறி மலைச் சிவன் ஆலயப் பூசகரும் நிர்வாகிகளும் நெடுங்கேணிக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுகின்றனர். அதுவும் தவறான முறையில். அதனால் நீதிமன்றம் அவர்களை விடுவித்தது.**

**மலையில் சாமி சிலைகள் மீண்டும் வைக்கப்பட்டபோது அங்கே காவல்துறையினரும் இருந்தனர். நீதிமன்றக் கட்டளையின்படி எல்லாமும் நடக்கின்றனவா என்பதைக் கண்காணிக்கவே அவர்கள் இருந்தனர். ஆனால், அப்போது எந்தவொரு தொல்பொருளும் சேதப்படுத்தப்பட்டதாகக் காவல்துறையினரால் கைதோ, நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. சரத்வீரசேகர வந்து சென்ற பின்னரே அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனில், இதன் பின்னால் சரத்வீரசேகரவின் அழுத்தம் இருக்கும் என்று நம்புவதற்கு நியாயங்கள் உண்டு.**

**இதுபோன்ற தேவையற்ற, அமைதியின்மைகளை சரத்வீரசேகர தனது செயல்கள் மற்றும் கருத்துக்கள் மூலம் தோற்றுவிக்கும்போது நாடாளுமன்றமும் அரசியல் தலைவர்களும் அதனைக் கண்டும் காணாமலும் இருப்பது கண்டிக்கத்தக்கது. வீரசேகரக்கள் போரால் பயனடைந்தவர்கள். அதிகாரத்தை அனுபவித்தவர்கள். எனவே அவர்களுக்கு முரண்பாடும் போரும் தேவையானவையாக இருக்கலாம். அவற்றை உருவாக்குவதற்கு அவர்கள் விரும்பலாம். அதற்கு இடமளிக்கப்படக்கூடாது. இனவாதக் கருத்துக்களையும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல் கருத்துக்களையும் தெரிவிக்கும் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் நாட்டுக்கும் மக்களுக்கும் இந்த ஆட்சி நல்ல முன்னுதாரணத்தைக் கொடுக்க வேண்டும்.**

# காலி முகத்திடல் போராட்டக்காரர்களை தாக்கியோர் தற்போது ஜனாதிபதியின் கீழேயேதான் உள்ளனர்

### சுமந்திரன் சாடல்



காலி முகத்திடல் ஜனநாயக போராட்டத்தை வன்முறையாக மாற்றியமைத்த தரப்பினர் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் உள்ளார்கள்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷர்களின் ஆதரவாளர்கள்தான் அமைதி வழி போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆகவே, போராட்டத்தை தற் போது விமர்சிப்பது பயனற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம் பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பானசபைஒத்திவைப்புவிவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப்பாதிப்புக்கு மத்தியில் நாட்டில் கடந்த ஆண்டு போராட்டத்தின் ஊடாகபலவிடயங்கள்வெளிப்படுத்தப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவிவிலகுமாறுவலியுறுத்தி காலி முகத்திடல் போராட்டக்களத்தில் இடம்பெற்ற ஜனநாயக போராட்டம் மே 09 ஆம் திகதிக்குப் பின்னர் தான் வன்முறையாக மாற்றமடைந்தது.

ஜனநாயகபோராட்டத்தை வன்முறையாக யார் மாற்றியதுஎன்பதுதொடர்பில்ஆராய வேண்டும்.போராட்டத்தை ஆளும் தரப்பினர் அவரவர் எண்ணம் போல் விமர்சிக்கிறார்கள்.

ஆனால் உண்மையை மறைத்து விடுகிறார்கள். மே09காலைஅலரிமாளிகையில் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக ஒன்றுகூடிய தரப்பினர் காலி முகத்திடலுக்கு விரைந்து சென்று அமைதி வழி போராட்டகாரர்கள் மீது வன்மையான முறையில் தாக்குதல் நடத்தினார்கள்.

காலி முகத்திடல் போராட்டக்களத்தின் மீது அரசாங்கம் தாக்குதல்நடத்தினால்அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகதற்போதையஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது ருவிட்டர் பதிவு ஊடாக செய்தி வெளியிட்டார். ஆனால் தாக்குதல் மேற்கொண்டவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

காலி முகத்திடல் ஜனநாயக போராட்டத்தை வன்முறையாக மாற்றியமைத்த தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தற்போது உள்ளார்கள் என்பதை அனைவரும்நன்கு அறிவார்கள். ஆகவே போராட்டம் (அரகலய) விமர்சிப்பது பயனற்றது. என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் விபத்தின் பாதிப்பை முழு நாடும் என்றாவது ஒருநாள் எதிர்கொள்ளும்

### உதய கம்மன்பில எச்சரிக்கை

சட்டமா அதிபர் திணைக்களம்மக்களின்வரிப்பணத்தில் இயங்குகிறது. ஆகவேசட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளை மக்கள் கேள்விகேட்கமுடியும். எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால்கடல்வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை முழு நாடும் என்றாவது எதிர்கொள் ளும் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம் பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட் டவை வருமாறு -

மனித செயற்பாடுகளால் இயற்கைக்குஏற்படும்பாதிப்பு மனித குலத்துக்கே பிரதிபலனாக அமையும் என்பதை எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து நிச்சயம் என்றோ ஒருநாள் உறுதிப்படுத்தும். இந்தகப்பல் விபத்தால் கடல் வளங்கள் பாதிக்கப்பட்டன, கடல் வாழ் உயிரினங்களும் உயிரிழந்தன. இதனைபணத்தால்ஒரு போதும் மதிப்பிட முடியாது.

இந்த கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்ய கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை 40 துறைசார்நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் விசேட குழுவை நியமித்தது. இந்த குழுவின் அறிக்கையை அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஏற்பட்ட அழிவை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

2020 ஆம் ஆண்டு நாட்டின் கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன்கப்பலால்கடல் வளங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை முழுமையாக மதிப்பீடு செய்யாமல் கப்பலை வெளியேற்ற வேண்டாம் என சட்டமா அதிபர் தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில் கப்பலை வெளியேற்ற ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என வெளிவிவகாரத்துறை அமைச்சின் அப்போதைய செயலாளர் ஜயநாத் கொலம்பகே கடற்படை தளபதிக்கு அறிவித்துள்ளார். கப்பலை வெளியேற்ற வேண்டாம் என ஜனாதிபதி, சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ள நிலையில் கப்பலை வெளியேற்றுமாறு ஜயநாத்கொலம்பகேஎவ்வாறு குறிப்பிட முடியும். ஆகவே இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

எம்.வி.எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்ளஇலங்கையில்வழக்கு தாக்கல் செய்வது பொறுத்தமானதாக அமையும் என சட்ட நிபுணர்கள் மற்றும், கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ள நிலையில் சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமையவே சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது பொறுப்பாக்கி அரசாங்கத்தால் தப்பிக்க முடியாது. நாட்டு மக்களின் வரிப்பணத்தில் தான் சட்டமா அதிபர் திணைக்களம் இயங்குகிறது. ஆகவேசட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகளை நாட்டு மக்கள் கேள்வி கேட்க முடியும். - என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு 4 ஆம் கட்ட இழப்பீடு





எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நான்காம் கட்ட நட்டஈடாக சுமார் 160.5 கோடி ரூபாவுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவின் பங்கேற்புடனும் கடற்றொழில் அமைச்சில் நடைபெற்றது.

கடற்றொழில்அமைச்சின் முயற்சியால், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்த 15,000 கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த சுமார் 5,000 பேருக்கான நட்டஈடு இம்முறைவழங்கப்படவுள்ள நிலையில், அன்று 30 பேருக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கு காசோலைகள், சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வைக்கப்படவுள்ளன.

குறித்த கப்பல் விபத்தால் கடலில்கலக்கப்பட்டபல்வேறு கழிவுப்பொருள்களால்வலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக 20 கடற்றொழிலாளர்களுக்கு கப்பலின் காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈட்டுத் தொகையும் இதன் போது வழங்கப்பட்டது.

இதுவரை கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக கப்பல் காப்புறுதி நிறுவனத்தால் 3068 மில்லியன் ரூபா (ரூ. 300 கோடிக்கும் அதிக தொகை) வழங்கப்பட்டுள்ளதுடன் முதல் மூன்று கட்டங்களில் 1463 மில்லியன் ரூபா (ரூ. 146 கோடி) வாழ்வாதாரத்தை இழந்த கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட நட்டஈட்டு கொடுப்பனவிற்காக கப்பல் காப்புறுதி கம்பனியால் இலங்கை அரசுக்கு 1605 மில்லியன் ரூபா (ரூ. 160.5 கோடி) வழங்கப்பட்டுள்ளதுடன், நான்காம் கட்டம் நிறைவடையும் போது வாழ்வாதாரத்தை இழந்த கடற்றொழிலாளிக்கு, தொழில்முறையின் பிரகாரம் தலா ரூ. 112,500 முதல் ரூ. 295,000 வரை கிடைக்கவுள்ளது. சுமார் 22 நாளகள் மீன்பிடி தடை விதிக்கப்பட்ட நீர்கொழும்பு களப்பில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் ஆகக் குறைந்தது ரூ. 45,000 நட்டஈட்டுத் தொகை கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, கடற்றொழில் சார்ந்த தொழில்களை மேற்கொள்ளும் மீன் வியாபாரிகள், கருவாடு உற்பத்தியாளர்கள், மீன்பிடி வலை விற்பனையாளர்கள், படகு திருத்துனர்கள் போன்றோருக்கு மீன்பிடித் தடையால் ஏற்பட்ட பாதிப்பிற்காக அவர்களது தொழில் முறைகளின் பிரகாரம் தலா ரூ. 22,500 முதல் ரூ. 336,000 வரை நட்டஈடுவழங்குவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேர்ள் எக்ஸ்பிரஸ் கப்பல் விபத்தால் கடற்றொழிலாளர்களுக்கு நேரடியாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதற்காககடற்றொழில் அமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவால் தயாரிக்கப்பட்ட 06 அறிக்கைகள் கடற்றொழில் அமைச்சால் காப்புறுதி நிறுவனத்திற்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. முதலாவது அறிக்கை விபத்து ஏற்பட்டு இரண்டு வாரங்களில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 06 ஆவது அறிக்கை கடந்த 2022 ஜூலை மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக்குழுவால்தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை, குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சின் மேலதிக செயலாளருமான தம்மிக ரணதுங்க மற்றும் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த ஆகியோரால் கடற்றொழில் அமைச்சரிடம் இந்நிகழ்வில் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட செயலாளர்களும் கலந்து கொண்டனர்.

# கொத்துக் கடைக்கு சீல்

பழுதடைந்த இறைச்சியுடன் கொத்துறொட்டி விற்ற உணவகத்திற்கு யாழ்ப்பாணத்தில் சீல் வைக்கப்பட்டது.
பொது சுகாதார பரிசோதகர்கள் அதிரடி நடவடிக்கை.





யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட ஆனைப்பந்திபகுதியில் அமைந்துள்ள பிரபல அசைவஉணவகத்தில் புதன்கிழமை மாலை ஒருவரால்வாங்கப்பட்ட கொத்து றொட்டியில் உள்ள இறைச்சி பழுதடைந்தமை தொடர்பில் பொது சுகாதாரபரிசோதகர்பு. ஆறுமுகதாசனுக்கு முறைப்பாடு கிடைத்தது.

இதனையடுத்து மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பாலமுரளி தலைமையில் யாழ். மாநகர சபை பொது சுகாதாரபரிசோதகர்கள் வியாழக்கிழமை குறித்த கடையில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது மிகவும் பழுதடைந்த குளிர்சாதன பெட்டியில் சுகாதாரச் சீர்கேடான முறையில் சமைத்த, சமைக்காத கோழி இறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என சுமார் 45 கிலோ இறைச்சி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதுடன் மேலும் பல குறைபாடுகள் இனங்காணப்பட்டது.

இதனையடுத்து வெள்ளிக்கிழமை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனால் மேலதிக நீதவான் நீதிமன்றில் ய பத்திரத்தினூடாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதவான் கடையினை மறு அறிவித்தல் வரை மூடி சீல்வைக்குமாறும், கைப்பற்றப்பட்ட 45 கிலோ இறைச்சியினை அழிக்குமாறும் பொது சுகாதார பரிசோதகரிற்கு உத்தர விட்டதுடன் வழக்கினை யூன் மாதம் 28ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இதனையடுத்து குறித்த கடைக்குச் சீல் வைக்கப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட 45 கிலோ இறைச்சியும் பொது சுகாதாரப் பரிசோதகரால் அழிக்கப்பட்டது.

# 'எல்பின்' ஆற்றுநீரில் இரசாயனக் கலவை உரிய நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்

## அரவிந்தகுமார் வேண்டுகோள்



எல்பின் ஆற்றுநீர் இரசாயனகலவைக்கு உட்பட்டிருப்பதானது நுவரெலியா மாவட்டத்துக்கும் அங்குவாழ் மக்களுக்கும் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் மிக விரைவாகவே இந்த விடயத்தில் தலையீடு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் நுவரெலியாமாவட்ட அரச அதிபரை வலியுறுத்தியுள்ளார்.

நுவரெலியாமாவட்ட அரச அதிபரிடம் எழுத்து மூலம் வலியுறுத்தியுள்ள கல்வி இராஜாங்க அமைச்சர் கடிதத்தின் பிரதிகளை விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, மீன்பிடித்துறை அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா, நுவரெலியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார் என அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நுவரெலியா மாவட்டத்தில் எல்பின், மெராயா, லிந்துலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளில் அநேகமானோர் எல்பின் ஆற்றின் இருபக்கக்கரையோரங்களை அண்மித்தவாறே விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

எல்பின் ஆற்று நீரையே தங்களது விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வரும் பிரதேச விவசாயிகள் துரதிஷ்டவசமாக மேற்படி ஆற்று நீரில் நச்சுத் தன்மையுடனான இரசாயன பதார்த்தம் கலந்திருப்பதன் காரணமாக விவசாயிகள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

அத்துடன் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னோக்கி நகர்த்தி செல்வதில் எதிர்கொள்ளப்படும் விளைவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு உரிய தலையீடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட விவசாயிகள் எனது கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதுடன் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் மேற்படி ஆற்றுநீர் அம்பேவெல பகுதியில் அமைந்துள்ள உற்பத்தி நிலையமொன்றின் கழிவுகள் ஊடாகவே இரசாயனக் கலவைக்கு ஆட்படுவதாகத் தெரிய வருகிறது.

இந்நிலைமை விவசாய நடவடிக்கைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதே வேளை ஆற்றின் உயிரினங்களுக்கும் உயிராபத்தை ஏற்படுத்தி வருகிறது. இது எதிர்காலத்தில் பாரிய மனித முரண்பாடுகளுக்கு வழிவகுக்கலாம்.

அதுமாத்திரமல்லாது, அப்பாவி மக்களை நோயாளிகளாக்கும் நிலைமைக்கும் கொண்டுசெல்லும் சாத்தியம் காணப்படுகிறது. மேலும் இது சட்டத்துக்கு முரணான செயற்பாடாகவும் அமைகிறது.

கடந்தகாலங்களில் எல்பின் ஆற்றில் பெருமளவு மீன்கள் இறந்தமை காரணமாக அந்த ஆற்று நீரின் மாதிரி இரசாயன பகுப்பாய்வுக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்பின் ஆற்றுநீர் இரசாயன கலவைக்கு உட்பட்டிருப்பது நுவரெலியா மாவட்டத்துக்கும் அங்குவாழ் மக்களுக்கும் பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்பதால் மிகவிரைவாகவே இந்த விடயத்தில் தலையீடு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை அறிவுறுத்தும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்.
- என்றுள்ளது.

# கம்பளையில் காணாமல்போன இளம் யுவதி கொன்று புதைப்பு!

## சந்தேகநபர் வாக்குமூலம்

கம்பளை பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணாமல்போயிருந்த இளம் யுவதியைத் தான் கொலை செய்தார் என்று சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனை ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

கம்பளை, எல்பிட்டிய பிரதேசத்தில் வசித்து வந்த 22 வயதுடைய பாத்திமா முனவ்வரா என்ற குறித்த யுவதி தனது பணியிடத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது காணாமல்போயிருந்தார்.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் 24 வயதான சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர் அப்பகுதியில் ஆடு வளர்த்து வருவது தெரியவந்தது.

ஆடுகளுக்குப் புல் வெட்டுவதற்காகச் சந்தேகநபர் சென்ற போது, குறித்த யுவதியைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார்.

அதற்கு அவர் மறுத்ததால், அவரைக் காட்டுப் பகுதிக்கு இழுத்துச் சென்று கொன்றார் எனச் சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சடலத்தை அதே இடத்தில் புதைத்தார் என்று சந்தேகநபர் வாக்குமூலம் அளித்த போதிலும், சடலம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

# திருமணமான யுவதி சடலமாக மீட்பு களுத்துறையில் மீண்டும் பரபரப்பு

களுத்துறையில் வீடொன்றில் தனியாக இருந்த 25 வயதுடைய திருமணமான யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

களுத்துறை, இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இவருக்குக் கடந்த சிலமாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் கணவன் பணி முடிந்து வீட்டுக்குச் சென்ற போது சமயலறையில் மனைவி மயங்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு உடனடியாக இங்கிரிய பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## கல்வி, .....

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் மிகமுக்கியமான விடயம் பிள்ளைகளுக்குத் தேவையான அறிவை வழங்குவது. நாம் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் வாழ்கிறோம். அனைவருக்கும் தேவையான அறிவை வழங்க முடிந்தால், நாட்டின் எதிர்கால வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

இலங்கை, அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கக்கூடிய நாடாகும். எனவே, அறிவை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். பாடசாலைக் கல்வியை வழங்கிய பின், தொழில் தகைமையை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். பல அமைப்புகள் இன்று அந்தப் பணியில் ஈடுபட்டுள்ளன.

இன்றைய தேவைக்கேற்ப நமது கல்விமுறை நவீனமயப்படுத்தப்படவில்லை. அதனால் நாம் 10 – 15ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறோம். நாம் இப்போது புதிதாகச் சிந்தித்து முன்னோக்கிச்செல்ல வேண்டும். இந்த அறிவை வழங்குவதற்குத் தேவையான பயிற்சியை ஆட்சியாளர்களால் மாத்திரம் வழங்க முடியாது.

அந்த பயிற்சி மற்றும் அறிவு பெரும்பாலானவை ஆட்சிக்கு வெளியே உள்ளன. இந்த அறிவை வழங்கக் கூடிய தனியார் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் நாம் இணைந்து பணியாற்ற வேண்டும்.

இந்தப் பணியை முறையாகச் செயல்படுத்துவதற்காக, இந்தமுறை கல்வி அமைச்சை ஒரு அமைச்சருக்கு வழங்கினோம். இந்த முழுமையான பொறிமுறையிலும் அவர் கவனம் செலுத்தி, அதற்கான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். கல்விக்காக நாம் தனி அமைச்சரவைக் குழுவை நியமித்துள்ளோம். எனவே கல்வியின் நவீனமயமாக்கலை இங்கிருந்து தொடங்குவோம். நாம் ஒரு புதிய உலகத்தை நோக்கி நகர்கிறோம்.

இன்னும் பத்து ஆண்டுகளில் நமது கல்வி முறையில் மாற்றம் ஏற்படும். ஏனென்றால், கண்ணுக்குத் தெரியாத எதிர்காலத்திற்காக நாம் கல்வியை உருவாக்க வேண்டும். அதற்கான பலமான வேலைத்திட்டம் தேவை. இளைஞர்களுக்கு இதுபற்றி முறையாகத் தெளிவுபடுத்தி, எதிர்காலத்திற்குத் தேவையான அறிவும் திறமையும் கொண்ட ஒரு பரிபூரண சமுதாயத்தை உருவாக்குவதே எனது எதிர்பார்ப்பு ஆகும். அதற்குத் தேவையான நிதியை 2024ஆம் ஆண்டு முதல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது – என்றார்.




அவுஸ்திரேலியாவில் உயர்க்கல்வியைத் தொடர
அநேகமான மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

**Courses available:**

- Hospitality Management
- Business Management
- Leadership and Management
- Early Childhood Education and Care
- Commercial Cookery

**Requirements:**

1. Minimum 18 years of age
2. Completion of GCE O/L
3. English level of at least IELTS 6 or PTE 50

Certificate III & IV | Diploma | Bachelor Degree

HOTLINE: 0766228891 / 0701436236/0758336540

தொடர்புக்கு:- Australian Migration Consultants
41 ½, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** நம் தமிழர் எதிர்பார்க்கும் தனி ஈழத்தை, இந்தியாவுடன் இணைக்கக்கூடாது என்று உலக்கையார் பதிலில் சென்றமுறை எழுதியிருந்தீர்கள். அப்படியானால் இந்தியாவின் ஆதரவை நீங்களும் எதிர்க்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** ஒருநாளும் இல்லை! யதார்த்தம் அறியாத எங்களின் ஒருசில தலைவர்களைப் போல அப்படிச் சொல்ல நான் ஒன்றும் முட்டாள் இல்லை. இந்தியாவின் ஆதரவு இல்லாமல் ஒருக்காலும் ஈழத்தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயத்திலும் நிச்சயமான உண்மை. நான் சொல்ல நினைத்தது வேறு விடயம்;.

தமிழர்கள் வாழ்கிறார்கள் என்ற அளவில், இந்தியாவின் தமிழ்நாட்டோடு நமக்கு தொப்புள்கொடி உறவு இருக்கிறதென்பது உண்மையே. அதனால் இந்திய தேசத்துடனான நமது உறவு, தாய் சேய் உறவென்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் ஈழத் தமிழர்களுடைய வாழ்க்கை முறை தமிழ்நாட்டுத் தமிழர்களுடன் ஒத்துப் போகக்கூடிய ஒன்றல்ல என்பதை நாம் விளங்கவேண்டும்.

அவர்களோடு நாம் ஒன்றிணைந்தால், இந்தியத் தமிழர்களாகிய அவர்களுக்கும் நமக்கும் இடையிலேயே பல முரண்பாடுகள் வெடிக்க வாய்ப்பிருக்கிறது. அவசரப்பட்டு ஒன்றுபட்ட பிறகு பிரிந்து நிற்பது, எதிராளிகளுக்கு நகைப்பைத் தரும் விடயமாய்த்தான் சென்று முடியும்.

சுயநிர்ணய உரிமையோடு வாழத்தான் ஈழத்தமிழர்கள் விரும்புகிறார்கள். இந்திய இணைப்பிலும் அது சாத்தியப்படப் போவதில்லை. அதனால் நான் சொல்லவருவது என்னவென்றால், இலங்கையில், தமிழர்க்கான ஆட்சியுரிமையுள்ள ஒரு தனிப்பிரதேசம் உருவாக வேண்டும். அந்தப் பிரதேசத்தின் நியமிக்கப்படாத காவலனாய் இருந்து இந்திய அரசு நம்மை நிழல் செய்து காக்கவேண்டும்.

இந்தியாவின் கரம்பற்றி சுயநிர்ணய உரிமையோடு நடக்கிறவர்களாய் ஈழத்தமிழர்கள் வாழவேண்டும். அந்நிலையில் இலங்கையில் வாழும் சிங்களவர்களும் தமிழர்களும் ஒருவரது உரிமையை மற்றவர் மதித்து, சகோதரர்களாய் வாழும் காலம் வரவேண்டும். இதுதான் எனது எதிர்பார்ப்பும் கனவும்.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் சொல்வது நடந்தால் நல்லதுதான். நடக்குமா என்பதுதான் கேள்வி?**

**2. உரலார் கேள்வி:-** உங்களது கழக முயற்சிகளுக்கு புலம் பெயர்ந்தவர்கள் போதிய அளவு துணை செய்கிறார்களா? உங்களது கழக முயற்சிகளின் பெறுமதி நம் சமூகத்தவரால் உணரப்பட்டுள்ளதா?

**உலக்கையார் பதில்:-** உங்கள் கேள்விக்கு ஆம் என்றோ, இல்லை என்றோ தனித்த ஒரு பதிலைச் சொல்லமுடியாதுள்ளது. இங்குளங்களோடிருந்து புலம்பெயர் தேசங்களிற்குச் சென்ற பலர், இன்றும் எங்கள் முயற்சிகள்மேல் மதிப்பும் விருப்பமும் கொண்டு செயற்படுகின்றனர். அத்தகையவர்களின் பங்களிப்பே புலம்பெயர்ந்தவர்களின் பங்களிப்பாய் எமக்குக் கிடைக்கிறது. எங்களது முயற்சிகளுக்குத் துணை செய்வோரில் அவர்கள் சிறுபான்மையினரே. அவர்களில் பெரும்பான்மையினர் எமது கழகவிழாக்களை வெறும் களியாட்ட விழாக்களாகவே கருதுகின்றனர்.

தமிழை நிலை நிறுத்தவென முதலில் தனித்தமிழ்நாடு கேட்கப்பட்டது. பின்னர் தனித்தமிழ்நாட்டைப் பெறுவதற்காய், ஈழப்போர் தொடங்கியது. அந்த ஈழப் போரினால் தமிழர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது. இதுதான் நாம் கடந்து வந்திருக்கும் வரலாற்றுப் பாதை. இந்த வரிசையில், நமது மூலநோக்கமாய் இருந்த, 'தமிழை நிலைநிறுத்தும் முயற்சியைத்தான்', எமது கழகம் கடந்த 43 வருடங்களாகச் செய்து வருகிறது.

எமது முயற்சியை, ஆரம்பத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்த அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களும் மதித்து மரியாதை செய்தனர். அதன் பின்னர் வந்த போராளிக் குழுக்களும் எங்கள் முயற்சிகளை கௌரவிக்கத் தவறவில்லை. அவர்களில் பலர் கம்பன் கழகத்தின் வளர்ச்சிக்குத் துணை செய்ததோடு, எங்கள் கழகவிழா நிகழ்ச்சிகளைக் காண, தங்கள் எது 'யூனிபோமுடனேயே' வந்திருந்ததைப் பலரும் அறிவர். அதன் பின்னர் நம் இனத் தலைமை ஏற்ற கூட்டமைப்பினரும்; ஏனைய கட்சியினரும் கூட கழகத்தைப் பேணி மதித்து நடக்கின்றனர்.

ஆனால் சில பிரமுகர்கள் மத்தியிலும் கொடையாளிகள் மத்தியிலும் இன்றும் சிறு குழப்பம் இருக்கிறது. அவர்களில் பலர் எங்களின் முயற்சிகளின் பெருமையை உணரவில்லை என்றே நினைக்கிறேன். நான் முன் சொன்ன வரிசையில் 'தமிழ்மொழியைக் காப்பது' என்பதுதான் இன்றைய பிரச்சினையின் மூல நோக்கமாய் இருக்கிறது. அதனைச் செய்யும் எங்களின் முயற்சிக்கு மேற்சொன்னவர்கள் தரும் ஆதரவு சற்றுக் குறைவாக இருக்கிறதென்பதே உண்மை.

மேற்சொன்னவர்களில் பலருக்குப் போரும்போர் இழப்பும்தான் முக்கியமாய்ப்படுகிறது. அதற்குச் செய்யும் உதவிகளையும் அவர்களில் பலர், புகழ் நோக்கமாகவே செய்து வருகின்றனர். அவற்றிற்கான ஆதரவும் தேவை என்பதில் மறுப்பில்லை. அதேநேரத்தில் நமது மூலநோக்கத்தின் வளர்ச்சி பற்றியும் அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

தமிழ்மொழியைக் காக்கவே தனித் தமிழ்நாடு வேண்டும் என்போர், இன்று தமிழ்மொழியைக் காக்கும் மூல முயற்சியைக் கண்டு கொள்ளாமல் இருப்பது விநோதமே!

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் ரொம்ப மனம் நொந்து போயிருக்கிறாரோ?**

**3. உரலார் கேள்வி:-** பிறப்பால் பிராமணர்களாய் இல்லாத பலர், இன்று நமது ஆலயங்கள் பலவற்றில் பூசகர்களாக இருந்து வருகிறார்களே. அது சரி என்று நினைக்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** யார் உண்மையாகப் பூசை செய்தாலும் இறைவன் அதனை ஏற்றுக் கொள்வான் என்பதில் சந்தேகமில்லை. அதனால் பூசகர்கள் செய்யும் பூசையில் பிழை இருப்பதாய்ச் சொல்லமாட்டேன்.

அந்நிலை ஏற்படக் காரணம் பிறப்பால் பிராமணர்களாய் இருந்தவர்களே. அது எப்படி என்று சொல்கிறேன். நம்நாட்டில் பிறந்து வளர்ந்த பரம்பரை அந்தணர்கள் பலர், இன்று அந்தத் தகுதியை வைத்து, வெளிநாடுகளுக்குப் பறந்து விட்டார்கள். அவர்களுக்குத் தாங்கள் பரம்பரை, பரம்பரையாய் வழிபாட்டியற்றிய ஆலயங்கள் பற்றியோ, தெய்வங்கள் பற்றியோ எந்தக் கவலையும் இல்லை.

மேற் சொன்ன காரியத்தால் இன்று நம்மிடத்தில் பரம்பரைப் பிராமணர்களுக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த இடைவெளியை நிரப்பத்தான் பரம்பரைப் பிராமணர்கள் அல்லாத பூசகர்கள், அந்தத் தொழிலைச் செய்ய முன் வந்திருக்கிறார்கள். உண்மையில் அவர்களைப் பாராட்ட வேண்டும். அவர்களும் இல்லாவிட்டால் இங்கு பல ஆலயங்களில் பூசை இல்லாமல் இருக்கவேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கும்;.

பரம்பரை, பரம்பரையாய்த் தாங்கள் பூசை செய்து வந்த ஆலயங்களை அனாதரவாக விட்டுவிட்டு, வெளிநாட்டு வாழ்க்கையின் வசதிகளை நோக்கி ஓடிவிட்ட, அந்தப் பரம்பரைப் பிராமணர்களைவிட, தங்களால் முடிந்த அளவு மந்திரங்களையும், பூசைமுறைகளையும், ஒழுக்கங்களையும் பயின்று செயற்பட்டு வரும் பூசகர்கள், இன்றைய நிலையில் உயர்ந்தவர்களாய்க் கருதப்பட வேண்டியவர்களேயாம்.

அதுமட்டுமில்லை, வெளிநாட்டிலும், உள்நாட்டிலுமாகப் பெரும்பணம் தேடிக் கொண்டுவிட்ட பரம்பரைப் பிராமணர்கள் பலர், இன்று தமது சந்ததியினரைப் பிராமணத் தொழிலுக்காய் ஆக்க நினைக்காமல், வேதப்படிப்பை மறந்து, 'இன்ரநனல்' பாடசாலைகளில் படிக்கவிட்டு வேறு தொழில்கள் பயிற்றுவித்து வருகிறார்கள். போகிற போக்கில், மேற்சொன்ன பூசகர்களும் இல்லாவிட்டால், இனி நாங்களாகவே ஆலயங்களில் பூசை செய்து கொள்ள வேண்டியோ அல்லது ஆலயங்களை இழுத்துப் பூட்ட வேண்டியோதான் வரும்.

**சல்லடையாரின் சலிப்பு * கண்ணப்பரின் பூசையையும் சிவபெருமானும் ஏற்றுக் கொண்டார் என்பதுதான் சைவத்தின் முடிவு.**

**4. உரலார் கேள்வி:-** இறைவனை அடைய அன்பு, அறிவு இவற்றில் எது முக்கியம்?

**உலக்கையார் பதில்:-** அன்பு செய்ய எல்லோராலும் முடியும். அறிவாராய்ச்சி செய்ய ஒருசிலரால்த்தான் முடியும். அதே போல, அறிவால் ஒருசிலர் மட்டும்தான் இறைவனைத் தொழலாம். அன்பால் எல்லோராலும்; இறைவனைத் தொழமுடியும். அதனால் இறைவனை அடைய அறிவை விட அன்பே சிறந்த வழி என்பேன்.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியார் அன்பானவரா? அறிவானவரா?**

**5. உரலார் கேள்வி:-** இலக்கணநடையா? பேச்சுநடையா? மொழிக்கு முதலாகும்.

**உலக்கையார் பதில்:-** நிச்சயம் பேச்சு நடைதான். பேச்சுநடை வந்து மெல்ல மெல்ல சீராகிறபொழுதுதான் இலக்கண நடை உருவாகியிருக்கும். இலக்கணம் ஆக்கிவிட்டுப் பிறகு பேசமுடியாது. பேசத் தொடங்கியபிறகு, மொழியைக் கருத்து வெளிப்பாட்டிற்கான முழுமைக்கருவியாய் ஆக்க முயலும்போது தான் இலக்கணம் பிறக்கிறது.

நான் சொல்ல நினைப்பதை எதிராளி முழுமையாய்ப் புரிந்து கொள்ளவேண்டுமானால் அதற்கு இலக்கணநடை அவசியம். பேச்சு நடை அன்பின் மொழி, இலக்கண நடை அறிவின் மொழி. பேச்சுநடையில் உணர்வு கூர்மையுற்று இருக்கும். இலக்கண நடையில் அறிவு கூர்மையுற்று இருக்கும்.

உறவுப்பேணலுக்கு உணர்வே அடிப்படை. ஆகவே பேச்சுநடையே எல்லோர்க்கும் உரியது என்பேன். எள்ளா, எண்ணையா முதல் வந்தது? என்று கேட்டால், எள்ளிலிருந்துதானே எண்ணெய் வந்திருக்கமுடியும் எனப்பலரும் பதிலுரைப்பார்கள். அப்பதில் உண்மையானதேயாம்.

அதே நேரத்தில் ஒன்றை நாம் மறந்து விடலாகாது. என்று எள்ளு தோன்றியதோ அன்றே எண்ணெயும் தோன்றிவிட்டது என்பதுதான் உண்மை. வெளிப்படுவதில்த்தான் முன்னர், பின்னர் என்ற நிலைகள் உண்டு. அதுபோலத்தான் பேச்சுநடைதான் மொழிக்கு முதலாய்த் தோன்றியிருக்கும். அதே நேரத்தில் பேச்சு நடை தொடங்குகிறபொழுதே இலக்கண நடையும் தொடங்கியிருக்கும் என்பதுதான் உண்மை.

**சல்லடையாரின் சலிப்பு * வாரிதியாரின் தமிழ் எள்ளுத்தமிழா? எண்ணெய்த் தமிழா?**

**6. உரலார் கேள்வி:-** பிரிட்டிஷ் அரச பரம்பரையில் புதிய அரசராய்ப் பொறுப்பேற்றிருக்கும் சார்ள்ஸைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** அவரைப் பற்றி என் மனதில் சிறிதளவேனும் மதிப்பில்லை. இன்னும் சொல்லப் போனால் வெறுப்புத்தான் நிறைய இருக்கிறது. டயானாவுடனான திருமணத்திற்கு முன்பே, அவரது முன்னாள் காதலியும், தற்போதைய புதிய மனைவியான 'கமிலா'வுடனான அவரது தொடர்பு பகிரங்கமானது.

அந்த உண்மையை மறைத்துத் தன்னை நம்பி மனைவியாய் வந்த டயானாவுக்கு அவர் செய்த துரோகம் மறக்கமுடியாதது. புதியதொரு பூப்போல வந்த டயானாவை உலகம் முழுவதும் நேசித்தது. இந்தப் பாவி மனிதரால்த்தான் அவளை நேசிக்க முடியாமல் போயிற்று.

இவரும் இவரது அரசகுடும்பத்தாரும் செய்த கொடுமைகளால் கொஞ்சம் கொஞ்சமாக மாறிப் போன டயானா, அரச பரம்பரைக் கட்டுப்பாடுகளை மீறி உலக மக்களுக்காய் பல உதவிகளைச் செய்ய முன்வந்தார். அந்தப் பயணத்தில், அவரது ஒழுக்கமும் சற்று பாழ்பட மற்றொருவரைத் திருமணம் செய்யும் முடிவுக்கு அவர் வந்தபோது, கார் விபத்தொன்றில் கொல்லப்பட்டார். அந்தக் கொலைக்குப் பின்னால் அரச குடும்;பத்தின் வலியகரமும் இருந்ததாய்ச் சொல்லப்படுகிறது.

டயானாவின் மரணத்திற்குப் பின் தன்னிலும் வயது மூத்த தனது பழைய காதலி கமிலாவை கரம்பிடித்து இன்று அவளோடு அரச சிம்மாசனம் ஏறி இருக்கிறார் சார்ள்ஸ். இவ்வளவு காலம் கழித்தும் டயானாவின் சிரித்த முகம் நம் மனதில் மறையாமல் நிற்பதால், அவருக்குத் துரோகம் செய்த இந்த இருவரையும் துளியளவும் என்னால் நேசிக்க முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல் அரச குடும்ப கட்டுப்பாடுகயைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியில் வந்த இளைய மகன் 'ஹரி'யையும் அவரது கறுப்பினக் காதல் மனைவியையும் ஒருமித்து பட்டமளிப்பு விழாவிற்கு அழைக்காமல், தனியே தனது இளைய மகனை மட்டும் பதவியேற்புக்கு அழைத்த இவரது செயல்களில் நாகரீகம் துளியளவேனும் இல்லை. இவரது செயலால் முன்னை நாள் நடிகையும் இளைய மகன் ஹரியின் மனைவியுமான 'மேகன்மார்க்கல்' புகழ் இன்று உலகளவில் பரவிவிட்டதாய்ச் சொல்கிறார்கள்.

மதிப்புக்குரிய அரசராய் இவரை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதுதான் உண்மை.

**சல்லடையாரின் சலிப்பு * அரசியலில் மட்டுமல்ல அரச பரம்பரையிலும் இதெல்லாம் சகஜமப்பா.**

---

**மே 16, 17 கட்டுப்பாட்டுத் தினங்கள்**

# யாழ். மாவட்டத்தில் டெங்கை ஒடுக்க அனைவரது ஆதரவும் அத்தியாவசியம்

## சுகாதாரப் பணிப்பாளர் வலியுறுத்து



யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புக்களைத்தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்களிப்பினை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், விசேட டெங்குக் கட்டுப்பாட்டுத் தினங்கள் தொடர்பாகவும் அவர் அறிவித்துள்ளார்.

மாவட்ட டெங்கு நிலை தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

யாழ் மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 1.160 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன் ஒரு இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் பருவ மழைக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உடனடியாகத் தீவிரப்படுத்த வேண்டிய அவசர தேவை உணரப்படுகின்றது. எனவே நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும் ஒருங்கிணைப்பதற்கும் மே மாதம் 16 மற்றும் 17 ஆகிய இரண்டு தினங்கள் விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விசேட தினங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளைத் திட்டமிடவும் ஒருங்கிணைப்பதற்கும் பிரதேசமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர்கள் தலைமையிலும் கிராமியமட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டங்கள் கிராம சேவையாளர்கள் தலைமையிலும் இவ்வாரம் இடம்பெறும்.

இக்காலப்பகுதியில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதன் மூலம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும். பொது மக்கள் தமது வீடுகளையும் வீட்டுச் சுற்றாடலையும் பார்வையிட்டு டெங்கு நுளம்புகள் பரவும் இடங்களை அழிக்க வேண்டும். வீட்டுச் சுற்றாடலில் காணப்படும் நீரேந்தும் கொள்கலன்களான சிரட்டைகள், இளநீர்க் கோம்பைகள், தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், ஐஸ்கிறீம் கப், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள், தண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை அகற்றவேண்டும். பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். தண்ணீர்ப் பீலிகளில் நீர் தேங்காதவாறு துப்பரவுசெய்தல்வேண்டும். மீன்தொட்டிகளில் தண்ணீரை அடிக்கடி மாற்றுதல்வேண்டும். தண்ணீர் சேகரித்து வைக்கும் பிளாஸ்ரிக் வாளிகளையும் தொட்டிகளையும் நன்றாகத் தேய்த்துக் கழுவவேண்டும்.

பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் மாணவர்கள் சிரமதான அடிப்படையில் பாடசாலை வளாகத்தில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்க வேண்டும். அரச தனியார் அலுவலகங்கள் வர்த்தக நிலையங்கள் வணக்கஸ்தலங்கள் பொதுச் சந்தைகள் போன்ற இடங்களைச் சிரமதான அடிப்படையில் சுத்திகரிக்க வேண்டும். பராமரிப்பின்றி காணப்படும் காணிகள் மற்றும் வீடுகளை உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் உடனடியாக துப்பரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

இக்காலப்பகுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணிக்க வீடுகளுக்கும் பொது நிறுவனங்களுக்கும் டெங்குக் கண்காணிப்புக் குழுவினர் வருகை தரவுள்ளனர். இக்களத் தரிசிப்பின்போது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதவர்களுக்கு முன்னெச்சரிக்கை வழங்கப்படும்.

அதன்பின்னரும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதுவிடின் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போதைய காலப்பகுதியில் காய்ச்சல் கடுமையான தலைவலி மூட்டுவலி போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். குறிப்பாக கர்ப்பவதிகள் முதியோர்கள் இவ்விடயத்தில் மிக அவதானமாகவும் துரிதமாகவும் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

டெங்கு நோயுடன் ஒருவர் உரிய நேரத்தில் வைத்தியசாலைக்குச் சமூகந்தந்தால் அவரை முற்றாகக் குணப்படுத்தமுடியும். அதே வேளை மிகத் தாமதமாக வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டால் இறப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதனை கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. எனவே யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்தவும் இறப்புக்களைத் தவிர்ப்பதற்கும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் அனைவரும் தமது பங்களிப்பினை வழங்கவேண்டும் - என்றார்.

# கண் சத்திரசிகிச்சைகளினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு!

## அமைச்சரவையில் பிரஸ்தாபிப்பேன் என்கிறார் ஜீவன்



நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் அமைச்சரவையிலும் வலியுறுத்தவுள்ளேன் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும்கூறியவைவருமாறு-

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அண்மையில் கண் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காலாவதியான மருந்து பாவனையாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது குணமடைந்துவருகின்றனர்.

ஜனாதிபதி, நிதி அமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோருடன் இது சம்பந்தமாக அமைச்சரவையில் பேச்சு நடத்தவுள்ளேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்வேன்.

நுவரெலியாவில் வறுமை வீதம் அதிகரித்துள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் போதாது. சம்பள நிர்ணய சபைக்கு நாம் செல்லவுள்ளோம். இதற்கு தொழிற்சங்கங்களின் ஆதரவு முக்கியம்.

கடந்த2022ஆம்ஆண்டு பணவீக்கம் 60 வீதமாக இருந்தது. தற்போது 35 வீதமாக குறைவடைந்துள்ளது. அடுத்தடிசெம்பர்ஆகும்போது பணவீக்கம் ஒற்றை இலக்கத்துக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. - என்றார்.

---

### களுத்துறை மாணவி சாவு:

## பிரதான சந்தேகநபருக்கு 26 வரை விளக்கமறியல்!

களுத்துறையில் 16 வயது மாணவி உயிரிழந்த சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரதான சந்தேகநபரை மே மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு களுத்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, மாணவியின் மரணம் தொடர்பான விசாரணைகளில் அவர் தங்கியிருந்த விடுதி உரிமையாளரின் மனைவியும் நேற்று கைது செய்யப்பட்ட நிலையில் அவர் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், விசாரணைகளின் போது, உயிரிழந்த மாணவிக்கு ஆசிரியர் ஒருவரிடமிருந்து கடைசி தொலைபேசி அழைப்பு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி பிரதான சந்தேகநபரிடம் வாக்குமூலம் பதிவு செய்யத பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (02)

---

## ஏ.எவ்.பி. இலங்கை புகைப்பட ஊடகவியலாளருக்கு மனித உரிமைகள் ஊடகவியலில் சர்வதேச விருது

2023ஆம்ஆண்டுக்கான மனித உரிமைகள் ஊடகவியல்விருதினை ஏ.எவ்.பி. இன் இலங்கையின் கொழும்பு புகைப்பட ஊடகவியலாளர் ஒருவர் வென்றுள்ளார்.

நியூயோர்க்கைதளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், அரிசோனா மாநில பல்கலைக்கழகம் மற்றும் வணிக ஊடகவியலுக்கான ரெனோல்ட்ஸ் மையம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட விருதுகளில் 'புகைப்படத் தொடர்' பிரிவில் கௌரவ விருதினை இரா கொடிகார (வயது 41) வென்றுள்ளார்.



கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் அப்போதைய ஜனாதிபதியாக பதவி வகித்த கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு வழிவகுத்த அரசியல் எழுச்சிகளின்போது ஆற்றிய பணிகளுக்காக இவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கொழும்பில்தொடர்ச்சியாகநடைபெற்ற போராட்டங்களின்போது நீங்கள் ஆற்றிய கடினமான மற்றும் சிறந்த பணிக்கான அங்கீகாரமாக இந்த விருது வழங்கப்படுகிறது என ஏ.எவ்.பி.இன் ஹொங்கொங்கைதளமாகக்கொண்ட ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான புகைப்பட பணிப்பாளர் மிலாடன் அன்டெனோவ் குறிப்பிட்டார்.

இரா 2008ஆம் ஆண்டு ஏ.எவ்.பி. இல் இணைந்துகொண்டதோடு, அதன் கொழும்பு பணியகத்தில் கடமையாற்றி வருகிறார்.

மாலைத்தீவின் அரசியல் குழப்பநிலை, 2015 ஆம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இடம்பெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் இவர் களத்தில் நின்று புகைப்படங்கள் எடுத்துள்ளார்.

உடனடி செய்திப் பிரிவில் ஏ.எவ்.பி.இன் காபூல் பணியகம் முதலாவது பரிசினை வென்றது.

மனித உரிமைகள் தொடர்பான ஒரு செய்தி நிகழ்வில், காலக்கெடு அழுத்தத்தின் கீழ் வேகம், துல்லியம் மற்றும் உயர்தரமான எழுத்தாக்கம் என்ற அவர்களின் பணிக்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தற்போது 151 நாடுகளில் ஏ.எவ்.பி. தனது சந்தாதாரர்களுக்கு பரந்தளவிலான விடயப்பரப்புகளில் விரிவான செய்திகளை வழங்குகின்றது.

அத்தோடு, அரிதாக, ஏனைய ஊடகங்களால் எப்போதாவது பதிவுசெய்யப்படும் இடங்களில் இருந்து இது பெரும்பாலும் செய்திகளை வழங்குகிறது.

---

## சீமெந்தின் விலை குறைகின்றதாம்!

அடுத்த வாரம் சீமெந்தின் விலை குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சீமெந்து மூடை ஒன்றின் விலை 2,750 ரூபாவாக உள்ளது.

எவ்வாறாயினும், அடுத்த வாரம் ஒரு மூடை சீமெந்து விலையில் கணிசமான அளவு குறையும் என எதிர்பார்ப்பதாக சீமெந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பால் மாவின் விலை குறைப்பு

இறக்குமதிசெய்யப்படும் பால் மாவின் விலை கிலோ ஒன்று 200 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

மே 15 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

---

## சர்வதேச தாதியர் தின நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது

சர்வதேச தாதியர் தின நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது

மேற்படி நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி வைத்தியசாலையின் தாதியர்கள் வைத்தியர்கள், என பலரும் கலந்து கொண்டதுடன், சர்வதேச தாதியர் தின நிகழ்வு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் அவதானிக்க முடிந்தது.

மேலும் தாதிய சேவையில் ஈடுபட்டு மறைந்த தாதியர்கள் இதன்போது நினைவுகூரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

---

## 16 மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகம்: கைதான ஆசிரியருக்கு விளக்கமறியல்!

களுத்துறையில்சுமார்16 பாடசாலை மாணவிகளைப் பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரை நேற்று களுத்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 16 பாடசாலை மாணவிகளைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் எனக் கூறப்படும் தனியார் வகுப்பு ஆசிரியர் களுத்துறை சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகத் தடுப்புப் பணியகத்தால் நேற்று கைது செய்யப்பட்டிருந்தார்.

களுத்துறைவடக்குபகுதியைச்சேர்ந்த 30 வயதுடைய திருமணமான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

களுத்துறைவடக்கு-காலி வீதியில்தனியார்வகுப்புகளை நடத்தும் சந்தேகநபரான ஆசிரியர், 16 சிறுமிகளைத் துஷ்பிரயோகம்செய்துள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது கணவரின் மடிக்கணினியைப் பரிசோதித்த போது அதில் சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்படும் காணொளிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது என்று சந்தேகநபரான ஆசிரியரின் மனைவி சம்பந்தப்பட்ட மாணவிகளில் சிலரின் பெற்றோர்களுக்கு அறிவித்திருந்தார்.

இதையடுத்து, குறித்த பெற்றோர்கள் மூலமாக களுத்துறைவடக்கு பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டிருந்தார். (02)

---

## சடலங்கள் மீட்பு

கம்பஹா மாவட்டம், மினு வாங்கொடை – வாரிய பொல பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

வாரியபொல பிரதேசத்தில் வயல் ஒன்றுக்கு அருகில் அமைந்துள்ள நீர் நிரம்பிய புதைக்குழியொன்றிலிருந்து இந்தச்சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர்கள் 24 மற்றும் 34 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இருவரும்நேற்றுமுன்தினம் (10) முதல்காணாமல்போயிருந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

---

## தாதியர் தினத்தில் கடனட்டை வழங்கல்






சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு தாதிய உத்தியோகத்தர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அட்டை வழங்கும் நிகழ்வு வெள்ளிக்கீழமை யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையும், தாதியர் பயிற்சிக் கல்லூரியும் இணைந்து இன்று முன்னெடுத்த சர்வதேச தாதியர் தின நிகழ்வில்,யாழ் ஹட்டன் நேனல் வங்கியின் மெட்ரோ கிளையினரும் பங்காளர்களாக இணைந்து கொண்டு தாதியர்களுக்கென விசேடமாக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் அடடைகளை வழங்கி வைத்தனர்.

குறித்த நிகழ்வு யாழ் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் ஹட்டன் நேனல் வங்கியின் மெட்ரோ கிளையின் செயற்பாடு முகாமையாளர் சி.மயூரன்,யாழ் ஹட்டன் நேனல் வங்கியின் உறவு நிலை முகாமையாளர் டசிகா ஜனகன்,பொது வைத்திய நிபுணர் பேரானந்தராஜா,தாதியர் பயிற்சி கல்லூரி அதிபர் ஜெயக்குமார், பிரதம தாதிய பரிபாலகர் சந்திர மவுலீசன்,தாதிய பரிபாலகர் சூரியகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (3)

---

## கல்முனை வலய கோட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பம்





(நூருல் ஹுதா உமர், ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கல்முனை கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் கல்முனை வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான ஏ.பி.பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைபவரீதியாக இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கோட்ட மட்ட போட்டிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். தனதுரையில் எதிர்வரும் மாகாண மட்ட விளையாட்டு போட்டியின் போது, கல்முனை வலயம் முதலாம் இடத்தை பெற்று சாதனை நிகழ்த்தும் என தனக்கு நம்பிக்கையிருப்பதாக மாணவர்களுக்கு ஊக்கமளித்து உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர், விளையாட்டினதும் கல்முனை கோட்டத்தினதும் பல்வேறு சிறப்பியல்வுகள் தொடர்பில் உரையாற்றினார்.

கல்முனை கோட்டத்தில் உள்ள கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேசங்களில் உள்ள 17 பாடசாலை மாணவர்கள் இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதுடன் 125 போட்டி நிகழ்சிகள் நடைபெற்றன. இரண்டு தினங்களுக்கு தொடர்சியாக நடைபெறும் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு கல்விமான்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், பிரமுகர்களின் பங்கெடுப்புடன் பிரமாண்டமாக நடைபெற்றது. இதன்போது பரிசளிப்பும், பாடசாலை மாணவர்களின் கண்கவர் அலங்கார அணி வகுப்புக்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வின் போது விளையாட்டுப் போட்டிக் குழுவின் செயலாளரும் உடற்கல்வி ஆசிரியருமான எம்.ஆர்.ஏ.கியாஸ் உட்பட பாடசாலைகளின் பிரதிநிதிகள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், ஏற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


Malaysia Tour
5 DAYS 4 NIGHTS
SOLD OUT
Next Tour
June 30
INCLUSION
» 04 Night stay in Kuala Lumpur
» Daily breakfast at hotel
» Return AirTicket
» Getting Highland tour with cable car
» City tour on arrival day
» Evening tour to twin tower
» Batu caves temple visit
» Putrajaya city tour
LKR 148,000.00
For Early Booking
Travel Date: 19 - 23 May 2023
Semba Services (Pvt) Ltd.
551A, Kasthuriyar Road ,Jaffna
+94 77 307 8799




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 29 வெள்ளிக்கிழமை 12.05.2023 கதிர் 56

# முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் இன்று தொடக்கம்

## பல இடங்களிலும் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது










வன்னியில் இறுதிப் போரின் இறுதிக் கட்டத்தில் மனிதப் பேரவலத்தை நிகழ்த்திய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகளின் நினைவாக முள்ளிவாய்க்கால் வாரம் இன்று தொடங்கியது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கு முதல் கிழக்கு வரை ஏற்கனவே முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வைத் தொடங்கியிருந்த நிலையில் முள்ளிவாய்க்கால் வாரத் தொடக்க தினமான இன்று பல்வேறு இடங்களிலும் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வுகள் பல அமைப்புக்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

2

## ஜனாதிபதி - தமிழர் தரப்பு பேச்சு பிற்போடப்பட்டது

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான இரண்டாம் நாள் பேச்சு பிற்போடப்பட்டுள்ளது.

நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக தொடர்ந்து மூன்று நாட்கள் பேச்சு நடத்தப்படும் என்று அரசுத் தலைவர் செயலகம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தது. அதன்படி வியாழக்கிழமை முதல் நாள் பேச்சுக்கள் மாலை 2 மணி நேரம் இடம்பெற்றன. தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாக இதில் ஆராயப்பட்டது.

2

## குரங்கு ஏற்றுமதியை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

ஒருலட்சம் குரங்குகளைச் சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய முன்மொழியப்பட்டதை எதிர்த்து பிரபல விலங்குநல ஆய்வாளரும் வர்த்தகருமான ஒட்டாரா குணவர்தன உள்ளிட்ட 26 விலங்கு உரிமை ஆர்வலர்கள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணைத் தடை கோரல் (ரிட்) வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

சீன மிருகக்காட்சிசாலைகளில் காட்சிப்படுத்துவதற்காக இலங்கைக்கு சொந்தமான ஒரு லட்சம் செங் (சிறுவன்) குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யுமாறு சீன நிறுவனம் ஒன்றின் கோரிக்கையை ஆளும் தரப்பு பரிசீலித்து வருவதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இது நாட்டில் பெரும் வாதப் பிரதிவாதங்களை எழுப்பியது. சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் அதனை எதிர்த்தனர்.

இது பன்னாட்டுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நடக்க முடியாத காரியம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அதேநேரம் இந்தக் கோரிக்கை சீன அரசிடமிருந்தோ அரசு மூலமாகவோ விடுக்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்திருந்தது.

இந்தப் பின்னணியில் தான் இப்போது குரங்குகளை ஏற்றுமதி செய்யும் முயற்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்பும்படி நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

இலங்கையின் தொழில் முனைவோரும், விலங்குகள் நல வழக்கறிஞருமான ஒட்டாரா குணவர்தன,

2

## யானை தாக்கி காதலி மரணம்; காதலன் வைத்தியசாலையில்

காட்டு யானை தாக்கி யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பண்டாரவளை –கொஸ்லாந்தை – மேல் தியலும பிரதேசத்தில் உள்ள நீர்வீழ்ச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காட்டு யானையின் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் கொஸ்லாந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக தியத்தலாவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காதல் ஜோடியான இருவரும், தற்காலிக கூடாரம் அமைத்து தங்கியிருந்த நிலையில், இன்று அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் வாரியபொல பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரும், மாத்தறை பகுதியைச் சேர்ந்த 23 வயது யுவதியுமே குறித்த பகுதிக்குச் சுற்றுலா சென்ற நிலையில் இந்தச் சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந் தச் சம்பவம் தொடர்பில் கொஸ்லாந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## கிளிநொச்சி வயல்களில் படைப்புழுவின் தாக்கம்

### விவசாயிகள் கவலை



கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்பயிர்களில் படைப்புழுக்களின் தாக்கம் அதிகரித்திருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். வன்னியில் தற்போது சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விதைத்து ஒரு மாதம் ஆகியுள்ள நிலையில் வயல்களில் சடுதியாக படைப்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, உருத்திரபுரம், கணேசபுரம், முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் இந்தப் படைப் புழுத் தாக்கம் அதிகளவில் காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். காலபோகத்தில் பெருமளவு செலவு செய்து பெற்ற அறுவடையினை விற்பனை செய்ய முடியாது பாதிக்கப்பட்டுள்ளதாம் இப்போது படைப் புழுத் தாக்கத்தாலும் பெரும்பாதிப்பைச் சந்திக்கவேண்டி இருக்கின்றது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

படைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கிருமிநாசினியைப் பெற அதிக விலை கொடுக்கவேண்டி இருப்பதால் மீண்டும் உற்பத்திச் செலவு அதிகமாகும் ஆபத்து இருக்கின்றது என்றும் அவர்கள் குறைப்பட்டனர். (113)

## வவுனியாவில் இ.போ.சவினர் இன்று சேவைப் புறக்கணிப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலைப் பணியாளர்கள் இன்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை இடம்மாற்றவேண்டும், தமது சாரதிகளைத் தாக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பயணிகள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்நோக்கினர். அதை நிவர்த்திக்கும் வகையில் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன.

ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்செல்லும் தனியார் பேருந்து, வழித்தட அனுமதிப்பத்திரமின்றி சேவையில் ஈடுபடுகின்றது. இ.போ.ச. வவுனியா சாலை பேருந்து நேரசூசியில் வவுனியா சாலம்பைக்குளம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களை ஏற்றிச்செல்கிறது. இது தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டும் பூவரசங்குளம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதனால் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை இடமாற்றவேண்டும், இ.போ.ச சாரதி மற்றும் நடத்துனர்கள் மீது தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் தாக்குதல் மேற்கொள்ளவது அதிகரித்துள்ளது. இதற்கு எவ்வித தீர்வுமின்றி நீதிமன்றில் பல வழக்குகள் இழுபடுகின்றன. எனவே ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் நிலுவையிலுள்ள வழக்குகளுக்குத் தீர்வு எட்டப்படவேண்டும்.

ஆகிய இரு கோரிக்கைகளையும் முன்வைத்தே இன்றைய

2

## நிறுத்தாமல் சென்ற லொறி மீது பொலிஸ் சூட்டதில் சாரதி இறப்பு

பொலிஸாரின் துப்பாக்ச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் கால்நடைகளை ஏற்றிச் சென்ற லொறி மீது எம்பிலிப்பிட் டிய பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த வாகனத்தில் பயணித்தவரே உயிரிழந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய – மஹாபலஸ்ஸ பகுதியில் இரவு நேர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகத்துக்கிடமாக பயணித்த லொறியொன்றை நிறுத்துமாறு உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை மீறிய லொறிச் சாரதி, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில், வாகனம் செலுத்திய போது, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

துப்பாக்கிச்சூட்டுக்கு மத்தியில் தப்பிச்சென்ற சந்தேகநபர்கள் லொறியிலிருந்த மாடுகளைக் காட்டுப் பகுதியில் விடுவித்து, வீரகட்டிய பகுதிக்குத் தப்பிச் சென்றனர்.

அதன்போது, பொலிஸார் அவர்களைச் சுற்றிவளைத்தனர். சம்பவத்தில் லொறியில் இருந்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்னதாகவே உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

லொறியிலிருந்த மேலும் மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். அதேவேளை, துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த பசுவொன்று கால்நடை மருத்துவரிடம் சிகிச்சைக்காக அனுப்பிவைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

இதேவேளை, லொறியைத் துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் வாகனத்துக்கு இடையூறு ஏற்படுத்திய கார் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (02)

# 275,000 மெற்றிக்தொன் எரிபொருள் கசிந்திருந்தால் டைமன் கப்பலால் பாரியவிளைவுகள் ஏற்பட்டிருக்கும்!

## நாலக கொடஹேவா கருத்து

தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன் கப்பலை நாட்டின் கடற்பரப்பில் வைத்திருப்பது அவதானத்துக்குரியது. தீ விபத்தால் ஏற்பட்ட செலவுகளை வைப்பிலிட்டதும் கப்பலை வெளியேற்றுமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானம் சிறந்தது.

துரதிஷ்டவசமாக கப்பலில் சேமிக்கப்பட்டிருந்த 275,000 மெற்றிக் தொன் எரிபொருள் கடலில் கலந்திருந்தால் பாரிய விளைவுகள் தோற்றம் பெற்றிருக்கும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதி நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்,நியூ டைமன் கப்பல் ஆகிய இரு கப்பல் விவகாரத்தையும் நீதியமைச்சர் தனக்கு ஏற்றாற்போல் பயன்படுத்திக் கொள்கிறார்.2020.07.15 ஆம் திகதி மொரிசியஸ் நாட்டின் கடற்பரப்பில் வகஷியோ என்ற சரக்கு கப்பல் விபத்துக்குள்ளானது. இந்த கப்பலில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 10 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் கடலுடன் கலந்து,பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. இவ்வாறான பின்னணியில் 2020 ஆம் ஆண்டு இறுதி பகுதியில் நாட்டின் கிழக்கு பகுதியில் நியூ டைமன் கப்பல் தீ விபத்துக்கு உள்ளானது.இதன் போது இந்த கப்பலில் 2 லட்சத்து 75 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.வகஷியோ கப்பலுக்கு நேர்ந்த கதி இந்த கப்பலுக்கு நேர்ந்தால் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை (மீபா) அறிவுறுத்தியது.

இந்தியாவுக்கு பயணத்தை மேற்கொண்ட நிலையில் நியூ டைமன் கப்பல் கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளானது. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய கடற்படையின் ஒத்துழைப்புடன் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்குமாறு வெளிவிவகாரத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார். இந்திய கடற்படையின் ஒத்துழைப்புடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

கடலலை சீற்றத்தால் கப்பல் நாட்டின் கரையோரத்தை நோக்கி நகரும் தன்மையில் இருந்தது என கடற்படை குறிப்பிட்டது.எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கப்பலில் தீ எந்த நேரத்திலும் மீண்டும் பரவலடையலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.கப்பலை நாட்டின் கரையோரத்துக்கு கொண்டு வந்து துரதிஷ்டவசமாக மீண்டும் கப்பலில் தீ பரவி, 2 லட்சத்து 75 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் கடலில் கலந்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

பாரதூரமான விளைவுகளை தோற்றுவிக்காமல் ஏற்பட்ட செலவுதொகையை முழுமையாக வைப்பிலிட்டதும், கப்பலை வெளியேற்றுமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார். இதனை நீதியமைச்சர் நன்கு அறிவார். ஆனால் நீதியமைச்சர் தற்போது மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிடுகின்றமை கவலைக்குரியது.

விபத்துக்கு உள்ளான கப்பலை நாட்டின் கடற் பரப்பில் தொடர்ந்து வைத்திருப்பது அவதானத்துக்குரியது ஆகவே கப்பலை வெளியேற்றுமாறு ஜனாதிபதி குறிப்பிட்டதில் எவ்வித தவறும் இல்லை.அப்போதைய நிலையில் ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சிறந்தது.வெளிவிவகாரத்துறை அமைச்சின் அப்போதைய செயலாளர் விடுத்த அறிவிப்புடன் நீதியமைச்சர் என்னைத் தொடர்புப்படுத்தியுள்ளார்.

முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே விடுத்த அறிவிப்புக்கு அப்போதைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன,அதாவது தற்போதைய பிரதமரிடம் கேள்வி கேளுங்கள் அதனை விடுத்து குறுகிய அரசியல் நோக்கத்துக்காக என்னை தொடர்புப்படுத்தி நீதியமைச்சர் என் மீது சேறு பூசுவது முறையற்றது. – என்றார்.

# இலங்கையிலிருந்து சென்ற மாணவிக்கு தமிழகத்தில் மருத்துவக் கல்வி மறுப்பு

இந்தியா - மதுரையில் வசிக்கும் இலங்கை வம்சாவழியான மாணவி ஒருவர் 12 ஆம் வகுப்பு பரீட்சையில் உயரிய புள்ளிகள் பெற்றுள்ள நிலையில் மருத்துவத்துறையில் அவரால் கல்வி கற்கமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை ஆணையூர் அகதி முகாமைச் சேர்ந்த மாணவியான யு.திரிதுா என்ற மாணவியே 6 பாடங்களிலும் மொத்தமாக 600 இற்கு 591 என்ற புள்ளியைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் தனது மதிப்பெண்கள் குறித்து மகிழ்ச்சியாக இருந்தாலும், தனது 'அகதி அந்தஸ்து' காரணமாக தனது கனவை அடைய முடியவில்லை என்று கூறியுள்ளார்.

இந்திய விதிமுறைகளின் படி, இலங்கைத் தமிழ் அகதிகள் மருத்துவப் படிப்புகளைத் தொடர அரச ஒதுக்கீட்டின் கீழ் தகுதியற்றவர்கள். இருப்பினும் ஏனையத்துறைகளில் கல்வி கற்கலாம்.

அறிவியலைத் தேர்ந்தெடுத்து மருத்துவராக வேண்டும் என்று தாம் ஆசைப்பட்டதாக குறிப்பிட்ட மாணவி தற்போது அந்த முடிவை மாற்றி வணிகவியலில் கல்வி பயின்று கணக்காய்வாளராக வரவேண்டும் என்று ஆசைப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஆணையூர் இலங்கை அகதிகள் முகாமில் 500 இற்கும் மேற்பட்டோர் வசித்து வரும் நிலையில், மாவட்டம் முழுவதும் உள்ள பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சுமார் 50 மாணவர்கள் கல்வி கற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மண்ணெண்ணெய் பட்ட பாம்பு போன்று கலக்கமடைகின்றார் நீதி அமைச்சர்!

## அஜித் மான்னப்பெரும போட்டுத்தாக்கு



எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மண்ணெண்ணெய் உடலில் பட்ட சாரை பாம்பு போல் கலக்கமடைகிறார். அவரது செயற்பாடு பிரச்சினைக்குரியதாக உள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிறிதொரு தரப்புடன் டீல் செய்ததால் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டார். கப்பலின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்து வழக்கு விசாரணைகளுக்கு முன்னிலையாகும் பின்னணியில் 4.5 மில்லியன் டொலர் கடன் பெற்று சிங்கப்பூர் நாட்டில் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் 1486 கொள்கலன்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 329 மெற்றிக் தொன் நைட்ரிக் அமிலம்,25 மெற்றிக் தொன் ஆசிட் அமிலம்,பிளாஸ்டிக் பரள்கள் 07 நாள்கள் தீ விபத்துக்கு உள்ளாகி கடலில் மூழ்கின. இதனால் கடல் வளங்களுக்கும்,கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பை பணத்தால் ஒருபோதும் மதிப்பிட முடியாது.

இந்த கப்பல் விபத்தால் 2021.05.20 ஆம் திகதி முதல் 2022.11.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு 6.48 பில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது என என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை (மீபா) சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்த கப்பல் விபத்தால் ஏற்பட்ட பாதிப்பை எதிர்வரும் 10 வருட காலங்களை உள்ளடக்கியதாக மதிப்பிட வேண்டும்.

2020 ஆம் ஆண்டு கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான நியூ டைமன் கப்பல் விவகாரத்தில் நட்டஈடு பெற்றுக்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. மீபா நிறுவனம் உரிய ஆவணங்களை சமர்ப்பித்த நிலையிலும் வழக்கு தாக்கல் செய்வது ஏன் தாதமப்படுத்தப்பட்டது என்பதை சுற்றாடல் துறை தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை தெரிவு குழுவில் விசேட கவனம் செலுத்தினோம்.

கப்பல் விபத்தால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நட்டஈடு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒருமித்த வகையில் செயற்படுகின்றன. வழக்கு தாக்கல் செய்து நட்டஈடு பெற்றுக்கொள்வதை பலமான சக்தி ஒன்று தடுத்துள்ளது. இலங்கையில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என கடல் வளங்கள் பாதுகாப்பு அதிகார சபை,40 துறைசார் நிபுணர்கள் வலியுறுத்திய நிலையில் சட்டமா அதிபர் திணைக்களம் மாற்று கொள்கைளை செயற்படுத்துகின்றமை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

கப்பலின் உரிமை நிறுவனம் சிங்கப்பூர் நாட்டில் உள்ளதால் அங்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என பொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டார்கள். ஆனால் தேசிய மட்டத்தில் பல தரப்பினர் கப்பல் நிறுவனத்துக்கு எதிராக எமது நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். கப்பல் நிறுவனத்தில் பிரதிநிதிகள் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகுகிறார்கள்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை தீவிரமடைந்துள்ள பின்னணியில் 4.5 மில்லியன் டொலர் கடன் பெற்று ஏன் சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.கப்பலின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்து வழக்கு விசாரணையில் முன்னிலையாகும் போது கடன் பெற்று சிங்கபூருக்கு ஏன் செல்ல வேண்டும் என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. இதன் காரணமாகவே இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை தெரிவு குழு ஊடாக அவதானம் செலுத்தினோம்.

இந்த வழக்கு விவகாரத்தில் வாதாடும் தன்மை இலங்கையில் இல்லை என நீதியமைச்சர் விஜயதாஸ குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றதாகும்.1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கப்பல் விவகாரம் தொடர்பில் இலங்கையில் வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. ஆகவே வரலாற்றை நீதியமைச்சர் மீட்டுப்பார்க்க வேண்டும்.

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் மண்ணெண்ணெய் உடலில் பட்ட சாரைபாம்பை போல் நீதியமைச்சர் கலக்கமடைகிறார். இவரது செயற்பாடு பிரச்சினைக்குரியதாகவுள்ளது.பலவிடயங்கள் தொடர்ந்தும் மறைக்கப்படுகின்றன..

நட்டஈட்டை குறைத்துக் கொள்ள கப்பல் நிறுவனம் பிரித்தானிய நீதிமன்றத்தை நாடியுள்ள நிலையில் இலங்கை 6.4 பில்லியன் டொலர் நட்டத்தை பெற்றுக்கொள்ள சிங்கப்பூர் நாட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

கடல்மார்க்கத்தில் ஏற்படும் விபத்துக்களின் போது நட்டஈட்டு தொகையை வரையறுத்துக் கொள்ளும் சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தில் சிங்கப்பூர் கைச்சாத்திட்டுள்ளது.ஆகவே இந்த விவகாரத்தில் 6.4 பில்லியன் டொலரை பெற்றுக்கொள்வது சந்தேகத்துக்குரியது.

இந்த கப்பல் விபத்தால் கடற்கரையோரங்களுக்கு ஏற்பட்ட மாசடைவை தூய்மைப்படுத்துவதற்கு கப்பலின் காப்புறுதி நிறுவனம் 1.6 பில்லியன் டொலர் வழங்கியுள்ளது,2022 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான நிலுவை தொகை வழங்கவில்லை.

நிலுவை தொகை வழங்குவதாக காப்புறுதி குறிப்பிட்டுள்ள நிலையில் அது வழங்கப்படவில்லை. இதன் பின்னணியில் யார் உள்ளார் என்பதை கேள்வி எழுப்பும் உரிமை எமக்கு உண்டு, தெரிவு குழுவில் எழுப்பிய கேள்விகளுக்கு நீதியமைச்சர் முறையாக பதிலளிக்கவில்லை, கலக்கமடைந்தார். நாட்டின் கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளான எம்.வி.எக்பிரஸ் பேர்ள் கப்பல்,நியூ டைமன் கப்பல் விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் முறையாக செயற்படவில்லை, இவர்களின் செயற்பாடு அதிருப்தியளிக்கிறது.

எம்.வி.எக்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் 250 மில்லியன் டொலர் இலஞ்சம் விவகாரம் தொடர்பில் நான் நீதியமைச்சரிடம் குறிப்பிட்டேன்.நல்லாட்சி அரசாங்கத்தில் டீல் செய்ததால் அவர் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.எமது அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகித்தவர் என்ற காரணத்தால் அவரிடம் குறிப்பிட்டேன். ஆனால் அதை அவர் எனக்கு எதிராகத் திருப்பினார்.

இந்த விவகாரத்தில் இங்கிலாந்து நாட்டில் வாழும் ஒருவர் வட இந்தியாவில் உள்ள பஹாமாஸ் தீவு வங்கியில் 250 மில்லியன் டொலர் வைப்பிட்டு அதனை இலஞ்சமாக வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டேன்.

இந்த விடயத்தின் உண்மை தன்மையை பகிரங்கப்படுத்துவதை விடுத்து பிறரை குற்றஞ்சாட்டிக் கொண்டு திரிகிறார். இலங்கையின் நீதியமைச்சரின் நிலை இவ்வாறானதாக உள்ளது என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

## முள்ளிவாய்க்கால் ...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் முதலாம் நாள் நினைவஞ்சலி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமாகிய நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் போரில் உயிரிழந்தவர்களின் நினைவாக அஞ்சலி செலுத்தினர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். மாணவர்களால் தயாரிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி அங்கு எல்லோருக்கும் வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி மக்களுக்குப் பரிமாறப்பட்டது.

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவிடம், வடமராட்சியில் தொண்டைமனாறு , தென்மராட்சியில் நாவற்குழி எனப் பல்வேறு பகுதிகளிலும் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. வடக்கில் மட்டமல்லாது கிழக்கிலும் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கப்பட்டது. திருகோணமலை சிவன் கோயிலடிப் பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்களையும் இணைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் 'முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி' வழங்கப்பட்டது. திருகோணமலை சிவன் கோயிலடிப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு இன்று காலை சென்ற பல்கலைக்கழக மாணவர்கள் கஞ்சிக்கான அரிசி மற்றும் விறகைத் தானமாகப் பெற்று சிவன் கோயிலடி முன்றலில் 'முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி'யை ஆக்கினர். மட்டக்களப்பில் தமிழர் தாயக மக்கள் அமைப்பினால் காந்தி பூங்கா முன்பாக கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

காந்திப் பூங்கா வளாகத்தில் உள்ள இலங்கையில் உயிர்நீத்த ஊடகவியலாளர்களுக்கான நினைவுத் தூபிக்கு முன்னால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி காய்ச்சப்பட்டு பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்தக் கஞ்சி வழங்கும் நிகழ்வில் பொது மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கஞ்சியைப் பகிர்ந்துகொண்டனர்.

தமிழர் தாயக மக்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சர்வ மத தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக இனப்படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவுகூர்ந்து பொதுமக்களுக்கு 'முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி' வழங்கப்படுகின்றது என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தில், முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவாக , முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குமாறு யாழ். பல்கலைகழக மாணவர் ஒன்றியம் அனைத்து தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளதுடன், மாணவர்களும் வடக்கு , கிழக்கு மாகாணங்களின் பல்வேறு பகுதிகளிலும் கஞ்சி வழங்கி வருகின்றனர்..

போரின் இறுதி நாட்களில் ஆயுத மோதல் பகுதிக்குள் சிக்குண்டிருந்த மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களை மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஆட்சி மட்டுப்படுத்தியது. போதிய உணவு கிடைக்காத நிலையில் வன்னியில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியையும் தென்னந் தோட்டங்களில் இருந்து பறித்தெடுத்த தேங்காய்களையும் கொண்டு கஞ்சி காய்ச்சி மக்களின் பட்டினி ஆற்றப்பட்டது. இந்தக் கஞ்சிக்கு இடுவதற்கான உப்பைக்கூடப் பெறமுடியாத அளவிற்கு கொழும்பு ஆட்சியாளர்கள் இறுக்கமான உணவுத் தடையை நடைமுறைப்படுத்தியிருந்தனர். கஞ்சியை அருந்துவதற்கான பாத்திரங்கள் இல்லாத நிலையில் தேங்காய்ச் சிரட்டைகளிலேயே மக்களுக்குக் கஞ்சி விநியோகிக்கப்பட்டது. இவற்றின் ஞாபகமாகவே ஆங்காங்கே கிடைக்கும் இடங்களில் கஞ்சி காய்ச்சி அது சிரட்டைகளில் மக்களுக்குப் பரிமாறப்படுகின்றது. (02, 03)

## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் நாளான இன்று அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பேச்சுக்கள் பிற்போடப்பட்டுள்ளதாக இன்று காலையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கான காரணம் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை.

அந்தப் பேச்சுக்கள் மே 15 மாலை 5 மணிக்கு நடக்கும் என்று அரசுத் தலைவர் செயலகம் தெரிவித்துள்ளது.

வியாழக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் காணி ஆக்கிரமிப்பு, காணாமற்போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விடுதலை, பயங்கரவாதத் தடைச் சட்டம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகிய ஐந்து விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. எனினும் உருப்படியான முடிவுகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலை யில் இன்றைய பேச்சுப் பிற்போடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தை வவுனியா சாலைப் பணியாளர்கள் மேற்கொண்டனர். இந்தப் போராட்டம் காரணமாக அலுவலக ஊழியர்கள் , மாணவர்கள் , மக்கள் போக்குவரத்துச் சேவைகளைப் பெறமுடியாது நீண்ட நேரம் காத்திருந்தனர். வவுனியா மத்திய பேருந்து நிலையத்திலிருந்து தனியார் பேரூந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டிருந்தன. (100)

## குரங்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண. மாத்தறை ஆனந்த சாகர தேரோ, ருக்ஷான் அமல் ஜயவர்தன, சோனாலி பெர்னாண்டோ, இரோமி அஹில்யா சல்காடோ, துமிந்திர ரஜித் ரத்நாயக்க, ரதா மனோரமா டி சாரம், ஸ்டெபானி வெகே – அலுவிஹாரே, புஷ்பதேவ தர்மவர்தன, ரந்திகா பிரபோத பெர்னாண்டோ, கிறிஸ்டின் பியான்ச ஷிவாராமாதிகு, கிறிஸ்டின் பேராசி தாரா மாதிக்கு நாயக், பந்துல பத்மசிறி பணாபிட்டிய, ருஷிகா நதியா டி லானெரோல், ஜயமஹா முதலிகே டொன் ஜராங்கனி, விஜேநாயக்க பத்திரனகே விபுலசேன உள்ளிட்ட பத்து பேர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையில் உலர் வலய டோக் மக்காக் (எம்.எஸ். சினிகா), ஈர மண்டல டோக் மக்காக் (எம்.எஸ். ஆரிஃப்ரான்ஸ்) மற்றும் ஹைலேண்ட் டோக் மக்காக் (எம்.எஸ். ஓபிஸ் தோமெலாஸ்) ஆகிய மூன்று அங்கீகரிக்கப்பட்ட செங்குரங்குகளின் கிளையினங்கள் உள்ளன என்று மனுதாரர்கள் தெரிவிக்கின்றனர். 1977 கணக்கெடுப்பின்படி, உலர் வலயத்தில் 439,000 குரங்குகளும், தாழ்நில ஈர மண்டலத்தில் 150,000 குரங்குகளும், மலைவாழ் கிளையினங்களில் 1,500 தனிநபர்களும் உள்ளனர்.

குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாகப் பிரதிவாதிகள் எடுத்திருக்கக்கூடிய எந்தவொரு முடிவையும் நிறுத்தி உத்தரவிடும்படி நீதிமன்றத்திடம் கோரி யுள்ளனர்.

# சுனாமி, யுத்தம், கொரோனா ஆகிய அழிவுகளிலும் நிதிமோசடி செய்தவர்கள் இன்றும் நாடாளுமன்றில்

## அநுரகுமார காட்டம்

சுனாமி, யுத்தம், கொவிட் பெருந் தொற்று ஆகியவற்றின் ஊடாக ஏற்பட்ட அழிவுகளிலும் நிதி மோசடி செய்தவர்கள் இன்றும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்கள். எங்கோ சென்ற கப்பலை நாட்டு அழைத்து, அழித்து கடலில் மூழ் கடித்துவிட்டுதற்போது நட்டஈடுபெற்றுக்கொள் வதை அரசாங்கம் நியாயப்படுத்துகிறது.

ஊழல்மோசடிகள்கடல்வாழ்உயிரினங் களையும் விட்டு வைக்கவில்லை. நாட்டு ம க்கள் இவர்களின்செயற்பாட்டைத்தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.நட்ட ஈட்டிலும் ஒரு தரப்பினர் கொள்ளையடிப்பார்கள் என மக்கள் விடுதலை முன்னணியில் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்து சம்பவம் உலக வரலாற்றில் மிகவும் பாரதூரமான சமுத்திர இரசாயன பேரழிவாக சர்வதேசமட்டத்திலானதுறைசார் நிபுணர்கள் அறிக்கை சமர்ப் பித்துள் ளார்கள்.இந்த அழி வில் இருந்து நாடு என்ற ரீதி யில் எப்போது விடுபடுவோம் என்ற சந்தேகங் கள் காணப்படுகின்றன.

இந்த நிலைமை அத்துடன் நிற்காது தொடர்வதை போன்றே உள்ளது. எங்கோ சென்றகப்பலைநாட்டுக்கு அழைத்து,கடலில் மூழ்கடித்து விட்டு இப்போது பேரழிவின் பின்னர் நஷ்டஈடு பெற்றுக்கொள்வது தொடர்பில் அரசாங்கம் போட்டிபோட்டுக் கொண்டு கருத்துக்களை குறிப்பிடுகிறது.

இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டில் சுனாமி அனர்த்தத்தின் போது பேரழிவு ஏற்பட்டது. இறுதியாக அதனூடாக ஊழல் மோசடிகள் நடந்தன.அதேபோன்று யுத்தத்தி லும் பேரழிவுகள் இடம்பெற்றன. அதிலும் ஆயுதம் மற்றும் மிக் விமான கொள்வனவு மோசடி என்பன நடந்தன.

அத்துடன் கொரோனா பாதிப்பின் போது மருந்து கொள்வனவு உள்ளிட்ட விடயங்களில் மோசடிகள் நடந்தன. அதேபோன்று பொருளாதார நெருக்கடியின் போது நிலக்கரி மற்றும் எரிபொருள் மோசடிகள் தொடர்பில் கதைக்கப்படுகின்றன. மருந்து கொள்வனவில் நடந்த மோசடியால் நுவரெலியாவில் பலர் கண் பார்வை பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறாக பேரழிவுகளில் ஊழல் மோசடிகளே நடக்கின்றன. அந்த வகையிலேயே இந்த கப்பல் விடயத்திலும் நடக்கின்றது. இந்த கப்பல் விவகாரத்திலும் 250 மில்லியன் டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி ஏதேவொன்று நடந்துள்ளது என்பதே தெளிவாகின்றது.அந்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் இந்த சபையில் இருக்கலாம். இங்கு உரையாற்றுபவர்கள் ஏதும் நடக்கவில்லை என்பதைக் கூற வில்லை.

பேரழிவுகளை தமது சொத்துக்களை பெருக்கிக்கொள்ளும் தந்திரங்களாக பயன்படுத்தும்செயற்பாடுகளே நடக்கின்றன. கப்பல் தீப்பற்றிய சம்பவத்தில் பல்வேறு சந்தேகங்கள் உள்ளன.



அந்தக்கப்பல்எப்படிஎமதுகடற்பரப்புக்குள் நுழைந்தது? அந்தக் கப்பல் விபத்துக்கு உள்ளான பின்னர் பாதிப்பு தொடர்பில் ஆராய சென்றவர்களுக்கு கப்பலுக்குள் நுழைய விடாது தடுத்தது ஏன்? நஷ்ட ஈடு தொடர்பான விடயத்தில் கப்பலில் இருந்த பொருள்களால் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படாதுஎன்பதுஉறுதிப்படுத்தப்பட்டுள்ளதா? இது தொடர்பான முழு நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா? என்ற சந்தேகங்களும் நிலவுகின்றன. – என்றார்.

# கனடாவின் ஒன்டாரியோவில் ஒருவாரத்துக்கு தமிழினப் படுகொலை அறிவூட்டல் பிரகடனம்

## அந்த மாகாண எம்.பி. விஜய் தணிகாசலம் அறிவிப்பு

*கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் இன்று முதல் எதிர்வரும் ஒருவாரகாலம் 'தமிழினப்படுகொலைஅறிவூட்டல்வாரமாக' பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் இடம் பெற்ற தமிழினப்படுகொலை தொடர்பில் இக்காலப்பகுதியில் அறிந்துகொள்ளுமாறு கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளு மன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் உலகமக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.*



*தமிழினப்படுகொலை அறிவூட்டல்வாரம் தொடர்பில்ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஸ்கான்பரோ ரூச் பார்க் தொகுதி உறுப்பினர் விஜய் தணிகாசலம் இதுபற்றி மேலும் கூறியவை வருமாறு -*

*21 ஆம் நூற்றாண்டின் மிக மோசமானஇனப்படுகொலையிலிருந்து மீண்ட இளைஞன் என்ற ரீதியில், கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்திலும்உலகளாவியரீதியிலும் மேமாதம் 12 - 18 ஆம் திகதிவரை நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரம் தொடர்பில் நினைவூட்டுகின்றேன்.*

*என்னால்கடந்த2019ஆம்ஆண்டு முன்வைக்கப்பட்டு,2021ஆம்ஆண்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 104 ஆம் இலக்கச்சட்டமானது தமிழினப்படுகொலை தொடர்பில் அறிவூட்டுவதன் அவசியத்தை ஏற்றுக்கொள்கின்றது. கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழினப்படுகொலைஉச்சகட்டத்தை அடைந்தது.*

*துரதிஷ்டவசமாக இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ்மக்கள் திட்டமிட்ட இன அழிப்புக்கு முகங்கொடுத்துவருகின்றமையுடன், அதுதற்போதும்இடம்பெற்றுவருகின்றது. இலங்கையில் பதிவாகிவரும் அண்மையகாலச் சம்பவங்கள் தமிழ்மக்களின் வழிபாட்டுத்தலங்கள் அரசாங்கத்தால் இலக்குவைக்கப்படுவதைப்புலப்படுத்துவதுடன் இது தமிழ்மக்களுக்கு எதிரான 'கலாசார இன அழிப்பு' ஆகும். அதேவேளை ஒன்ராரியோவில் வாழும் தமிழ்மக்கள் பல தலைமுறைகளாக இடம்பெற்ற இனவழிப்பால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அதன் வடுக்களின்தாக்கத்தைத்தற்போதும் எதிர்கொண்டுவருகின்றனர்.*

*எனவே தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டத்தை முக்கியமாகக் கருதுவது முன்னெப்போதையும்விட இப்போது அவசியமானதாக மாறியுள்ளது. எனவேதமிழினப்படுகொலைகுறித்து அறிந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்ளும் அதேவேளை, நாமனைவரும்இணைந்து இத்தகைய இனப்படுகொலை மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தமுடியும் என்று குறிப்பிட்டார்.*

# முள்ளிவாய்க்கால் கஞ்சி வவுனியாவில் வழங்கல்








யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியைப் பரிமாறி தமிழ் மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றையும் , வலிகளையும் இளைய தலைமுறையினருக்குகடத்தும்செயற்பாட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

அந்தவகையில் நேற்று (வியாழக் கிழமை) மதியம் ஒருமணியளவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலத்திற்கு முன்பாக குறித்த செயற்பாடு மு ன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாடசாலை மாணவர், பொதுமக்கள் எனப் பலரும் கஞ்சி அருந்திச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில் வவுனியா மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளும் கலந்துகொண்டனர்.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில் நல்லூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்







யாழ்ப்பாணம்– நல்லூரில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி முன்பாக நேற்று (வியாழக்கிழமை) குறித்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணி தலைவி வாசுகி சுதாகரன் தலைமை தாங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் கொல்லப்பட்ட மக்களுக்கு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் முன்பாக சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்காலில் அகப்பட்ட மக்களின் பசியைப் போக்க கஞ்சி வழங்கப்பட்டமையை நினைவுகூரும் முகமாக இந்த முள்ளிவாய்க்கால்கஞ்சிவழங்கப்பட்டுவருகின்றமைகுறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெளிவந்த உண்மைகள்

தொல்லியல் திணைக்களம் வடக்கு கிழக்கில் முன்னெடுத்துவரும் செயற்றிட்டங்கள் எந்த வகையில் மேற்கொள்ளப்படுகின்றன என்கிற உண்மை இப்போது வெளியாகி இருக்கின்றது. அரசுத் தலைவர் தலைமையில் புதன்கிழமை நடந்த கூட்டத்தில் திணைக்களத்தின் பணிப்பாளரே இந்த உண்மையைப் போட்டுடைத்திருக்கின்றார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களம் ஏன் பௌத்த மதவாதத்திற்கு ஏற்ப மட்டுமே செயற்படுகின்றது என்பதற்கான காரணத்தை அவரது பதில் தெளிவுபடுத்தியுள்ளது.

காணி முகாமைத்துவம் தொடர்பிலான நிறுவனங்களின் சட்ட ஏற்பாடுகளில் திருத்தம் மேற்கொள்வது மற்றும் புதிய சரத்துக்களை திருத்துவது உள்ளீடு செய்வது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் கூட்டம் நடந்தபோது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரின் வாயிலிருந்து உண்மை உருண்டது.

கடந்த 30 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வடக்கு கிழக்கில் தொல்லியல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அங்கு தமது கவனம் குவிக்கப்பட்டிருக்கின்றது என்று அவர் தெரிவித்தார். அது இயல்பானது. நியாயமானது. ஆனால் அடுத்து அவர் கூறியதுதான் மிக முக்கியமானது. அது வடக்கு கிழக்கில் அடையாளப்படுத்தப்படும் எந்த இடங்களைத் திணைக்களம் ஆய்வு செய்யப் போகின்றது என்பதைக் குறித்தது.

கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற போர் காரணமாக வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல் திணைக்களம் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியவில்லை, ஆகவே, வடக்கு, கிழக்கிற்கு முன்னுரிமை அளித்து திணைக்களம் செயற்படுகின்றது, இதனால்தான், வடக்கு, கிழக்கில் அதிகளவான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் வெளிப்படுகின்றது.

அதேநேரம், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொல்பொருளியில் செயற்பாடுகள் தொடர்பிலான செலவீனங்களுக்கு அரச நிதி போதுமானதாக இல்லை. சில நன்கொடையாளர்கள், சர்வதேச முகவரகங்கள் உள்ளிட்டவைதான் அளிக்கின்றன. அதனைவிடவும் பௌத்த தேரர்கள்தான் நிதியை வழங்குகின்றார்கள் – என்றார்.

ஆக மொத்தத்தில் பௌத்த அடையாளங்களை மீளுயிர்ப்புச் செய்வதற்கு, அல்லது இருப்பவற்றை பௌத்த அடையாளங்களாக நிரூபிப்பதற்கு தொல்லியல் திணைக்களம் அதீத ஆர்வம் காட்டி நிற்பதற்குப் பின்னணி பிக்குகள்தான் என்பது இதன் மூலம் தெளிவாகியிருக்கிறது. இப்படி ஓர் அரச திணைக்களம் இயங்குவது முடியாது, தவறானது என்பதை உடனடியாகவே அரசுத் தலைவர் புரிந்துகொண்டார் என்பது அவரது கருத்துக்களில் இருந்தே தெரிகின்றது.

தனிநபர்களின் நிதியை, நாட்டின் தேசிய கொள்கைகளை முன்னெடுப்பதற்கு பயன்படுத்தமுடியாது என்று உடனேயே திட்டவட்டமாகத் தெரிவித்தார். வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியையே தொல்பொருள் திணைக்களம் பயன்படுத்தவேண்டும் என்றார், வெளிவளங்கள் திணைக்களத்தின் ஊடாகக் கிடைக்கின்ற நிதியைப் பயன்படுத்தவேண்டும், தனிநபர்களின் நிதியைப் பெற்று அவர்களுக்கு இசைவான வகையில் செயற்படமுடியாது, அவ்விதமான செயற்பாடுகளை முழுமையாக நிறுத்துங்கள் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

யாராவது தனி நபர்களோ நிறுவனமோ நிதியை அளித்து, வடக்கில் அதைச் செய்யுங்கள் இதைச் செய்யுங்கள் என்று கூறினால் உங்களால் அதற்கேற்பச் செயற்படமுடியாது. நீங்கள் அரச திணைக்களம். தனியார் துறை நிறுவனம் அல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்றும் கடிந்துகொண்டார்.


இதனைவிடவும், தொல்பொருளியல் திணைக்களம் அடையாளப்படுத்திய இடமொன்றில் எவரும் சென்று வீட்டைக்கட்டவோ, விகாரையை அமைக்கவோ முடியாது. அது அரசுக்குச் சொந்தமானது. அரசுக்குச் சொந்தமான பகுதியில் அவர்கள் தமது விருப்பப்படி நிர்மானங்களைச் செய்யும்பட்சத்தில் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த விடயத்தினை நான் வடக்கில் உள்ளவர்களுக்கும் தெரிவித்துள்ளேன். அதேபோன்று நிர்மானங்கள் முறையற்று மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதனைத் தடுப்பதற்குத் தேரர்கள் தேவையில்லை. பொலிஸார், படையினர் ஊடாக நடவடிக்கைகளை முன்னெடுத்துத் தடுக்கமுடியும் என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

ஆகமொத்தத்தில் தொல்லியல் திணைக்களம் என்னென்ன தவறுகளைச் செய்கிறது என்பதை அவர் தெரிந்திருக்கிறார், புரிந்திருக்கிறார். அதேநேரம் இனிமேல் அப்படி நடக்காமல் இருக்கவேண்டும் என்கிறார். ஆனால், இதுவரை நடந்த தவறுகளை யார் பொறுப்பேற்பது? யார் சீர்செயவது? எப்போது சீர் செய்வது என்பதற்குப் பதில் இல்லை. ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள அரசுத் தலைவராலேயே ஒரு திணைக்களத்தின் தவறைத் தட்டிக்கேட்க முடியவில்லையாயின் கட்டுப்படுத்த முடியவில்லையாயின். யார் அதனைச் செய்வது? திணைக்களம் செய்வது தவறு என்று பகிரங்க வெளியில் சொன்ன பின்னரும் அது குறித்து நடவடிக்கை எடுக்காமல் கடந்து செல்லும் பௌத்த மனோநிலையே இந்த நாட்டின் இவ்வளவு சீரழிவுக்கும் காரணம் என்பதை ரணில் போன்ற தலைவர்கள் எப்போது உணர்கிறார்களோ அப்போதே இந்த நாடும் உருப்படும்.

# வேட்பாளர்களான அரச ஊழியர்களின் பெருமளவு பிரச்சினைகளுக்குத் தீர்வு

## என்கிறாஜுர் பிரதமர் தினேஸ் குணவர்தன



வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உள்ளிட்ட பெருமளவு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சிய சிறுசிறு பிரச்சினைகள் தொடர்பில் மீண்டும் தேர்தல் ஆணைக் குழுவுடன் பேச்சு நடத்தி தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர மற்றும் அனுர பிரியதர்ன யாப்பா ஆகிய எம்.பிக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முதலில் உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நாம் மறந்து விடக்கூடாது. அந்த வகையில் இந்த விடயம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒன்றாகும்.

இரண்டாவதாக தேர்தல் சட்டம் என ஒன்று நடைமுறையில் உள்ளது. அது நாம் அனைவரும் இணைந்து நிறைவேற்றிய சட்டம். அந்த வகையில் இந்த விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு இணங்கவே நாம் செயற்பட முடியும்.

அதன்பிரகாரம் தேர் தல் ஆணைக்குழுவின் நிபந்தனையின் படியே அவர்கள் கடமைக்கு செல்வது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாம் தேர்தல் ஆணைக் குழுவை அழைத்து பேச்சு நடத்தி இந்த செயற்பாடுகளை மேற்கொண்டோம்.

தற்போது பெருமளவானோருக்கு இந்த நிவாரணம் கிடைத்துள்ளது. சில இடங்களில் சிக்கல்கள் இருக்கலாம். அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டது போல் நாம் அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

தாம் போட்டியிடும் தேர்தல் தொகுதிக்கு வெளியே அண்மையில் உள்ள பிரதேசத்தில் கடமைக்கு செல்லுமாறு நாம் சுற்றறிக்கை வெளியிட்டிருந்தோம்.

சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு அவ்வாறு கடமைக்குச் சென்றால் போதும். அவர்கள் தொழிலுக்கு அமர்த்தப் படும் இடம் தொடர்பில் பிரச்சினைகள் இருந்தால் தேர்தல் ஆணைக் குழுவுடன் பேசி அதனைத் தீர்க்க முடியும். எவ்வாறெனினும் முழுமையாக தேர்தல் சட்டத்துக்கு மாறாக செயற்பட முடியாது. எமது தனித் தீர்மானத்தால் அவ்வாறு செயற்படவும் முடியாது.

வேட்பாளர்களான அரசாங்க ஊழியர்கள் விடுத்த அனைத்து வேண்டுகோள் தொடர்பிலும் நாம் தேர்தல் ஆணைக்குழுவுடன் அவ்வப்போது கலந்துரையாடியுள்ளோம். இதில் எந்த அரசியல் பிரச்சினையும் கிடையாது. செவ்வாய்க்கிழமை இரவும் அது தொடர்பில் நாம் கலந்துரையாடியுள்ளோம் அதற்கிணங்க நாம் மீண்டும் தேர்தல் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தி முடிவு ஒன்றை எடுப்போம்.

அத்துடன் தற்போதுள்ள முக்கிய பிரச்சினை அவர்களுக்கான சம்பளம் கிடைக்க வேண்டும் என்பதும் கடமையை மேற்கொள்வதற்கான அலுவலகம் ஒன்று வழங்கப்படவேண்டும் என்பதுமாகும். இந்த நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டால் மீண்டும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இவ்வாறு 80 ஆயிரம் வேட்பாளர்கள் உள்ளனர். அவர்களின் 3 ஆயிரம் பேருக்கே பிரச்சினைகள் இருந்தன. தற்போது அது பெருமளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோருக்கும் இந்த பிரச்சினை கிடையாது. அதனால் இதனைப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் நாம் அனைவரும் இணைந்து இதற்கு தீர்வு பெற்றுக் கொள்வோம். – என்றார்.

# சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை அரசு மீறியுள்ளது

## கிரியெல்ல குற்றச்சாட்டு



அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியம் நிதி உதவி வழங்கி இருக்கிறது. ஆனால் அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் நீதிமன்ற உத்தரவை மீறியதன் மூலம் நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மீறியுள்ளது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இலங்கைக் கடலில் விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நஷ்ட ஈடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பணம் கொடுக்க மறுத்ததாலே தேர்தலை நடத்த முடியாமல் போனது. அதனாலேயே தேரதலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்திருந்த அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் பிரதமர் தற்போது அதனை மறந்துவிட்டு அரச ஊழியர்கள் தொடர்பில் மிகவும் கவலைப்பட்டு பேசுகிறார். அரசாங்கத்தின் நடவடிக்கையாலேயே அரச ஊழியர்கள் பாதிக்கப்பட்டதை பிரதமர் நினைவில் கொள்ளவேண்டும்.

மேலும் நீதிமன்றம் தொடர்பில் பிரதமர் சபையில் பெருமையுடன் பேசினார். ஆனால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேவையான பணத்தை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் அரசாங்கம் பணம் வழங்காமல் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்பட்டது.

பாகிஸ்தானில் எமது நாட்டைப்போல் பொருளாதார பிரச்சினை இருக்கும் போது, அந்த அரசாங்கம் தேர்தலை பிற்போட நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன்போது பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தேர்தலை நடத்துமாறு உத்திரவிட்டது. இலகையில் இடம்பெற்றதைப்போலவே அதிகாரி நீதிமன்றத்துக்கு வந்து, தேர்தலை நடத்த பணம் இல்லை என வாக்குமூலம் அளித்தார்.

ஆனால் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், தேர்தலை நடத்த பணம் வழங்காவிட்டால் சிறைக்கு செல்ல தயாராகுமாறு தெரிவித்தது. அவ்வாறே பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனால் அரசாங்கமே சட்டவிரோதமான முறையில் தேர்தலை பிற்போட்டது. நீதிமன்ற உத்தரவை மீறியது, நீதிபதிகளை நாடாளுமன்றத்துக்கு அழைத்து சிறப்புரிமை குழுவுக்கு முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துவந்தது. சர்வதேச நாணய நிதியம் எமக்கு உதவியது, சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதாக தெரிவித்த வாக்குறுதியின் அடிப்படையிலாகும்.

ஆனால் அரசாங்கம் நாணய நிதியத்தின் முதல்கட்ட பணம் கிடைத்ததுடன் தேர்தலை ஒத்திவைத்து, சட்டத்தின் மாண்பை இல்லாமலாக்கியது. அதன் பிரகாரம் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மீறியுள்ளது. – என்றார்.

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ்பெறுமாறு இலங்கையை வலியுறுத்துக

## அமெரிக்காவில் சர்வதேச மன்னிப்புச்சபை பிரசாரம்

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை முற்றாக நீக்கும் அதேவேளை, தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத

எதிர்ப்புச்சட்டத்தை வாபஸ் பெறுமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூது–வர் மஹிந்த சமரசிங்க ஆகியோரிடம் வலியுறுத்துமாறுகோரி அமெரிக்காவில் இயங்கும் சர்வதேச மன்னிப்புச்சபை பொதுமக்களுக்கான பிரசாரமொன்றை ஆரம்பித்துள்ளது.

அப்பிரசாரத்துக்கான அடிப்படைக்காரணம் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ள மன்னிப்புச்சபை கூறியிருப்பவை வருமாறு –

அமைதிப் போராட்டக்காரர்கள்மீது இலங்கை அரசாங்கம் அடக்குமுறைகளைப் பிரயோகித்துவருவதுடன் சுமார் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக போராட்டக்காரர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் விமர்சகர்களை அடக்குவதற்கும் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றது.

அவ்வாறிருக்கையில் தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் ஊடாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதன் மூலம் தமது மீறல்களை மறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப்போலவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமும் இலங்கை மக்களுக்கு மிகவும் ஆபத்தானதாகும்.

எனவே அந்தச் சட்டமூலம் முழுமையாகக் கைவிடப்படவேண்டும் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்படவேண்டும்.

இலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்டிருக்கும் தாக்கத்துக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளும், குற்றங்களுக்குத் தண்டனை வழங்காத போக்கும் மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதித்திருப்பதுடன் நாட்டின் வளங்களையும் வீணடித்துள்ளது.

அதனையடுத்து பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கை மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டார்கள்.

அந்தப் போராட்டங்கள் இராணுவ ஒடுக்குமுறை மற்றும் மிகமோசமான பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் பிரயோகம் ஆகியவற்றின் ஊடாக இலங்கை அதிகாரிகளால் அடக்கப்பட்டன.

அமைதியான முறையில் தமது கருத்துக்களையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவதற்கான உரிமை நாட்டுமக்களுக்கு இருக்கும் அதேவேளை, அதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது.

எனவே அமைதிப்போராட்டக்காரர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாக முடிவுக்குக்கொண்டுவருவதுடன் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான மக்களின் உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர் மஹிந்த சமரசிங்க ஆகியோரிடம் இதனை வலியுறுத்துமாறு பொதுமக்களிடம் கோரியிருக்கும் மன்னிப்புச்சபை, அதன் உத்தியோகபூர்வ இணையப்பக்கத்தில் கோரிக்கைப்படிவமொன்றையும் வெளியிட்டுள்ளது.